بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 18

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

16 ஷஃபான் 1439 ஹிஜ்ரி கமரி   3 ஹிஜ்ரத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

3 மே 2018

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا

كُلُوۡا مِنۡ طَيِّبٰتِ مَا رَزَقۡنٰكُمۡ

وَاشۡكُرُوۡا لِلّٰهِ اِنۡ كُنۡتُمۡ اِيَّاهُ تَعۡبُدُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான பொருள்களிலிருந்து உண்ணுங்கள். நீங்கள் (உண்மையில்) அல்லாஹ்வைத்தான் வணங்குகின்றீர்களென்றால் அவனுக்கு நன்றி பாராட்டுங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 173)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நீரும் உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருப்பவரும், இறையச்சத்துடன் முழுமையாக உம்மைப் பின்பற்றியவாறு உமக்கு கீழ்ப்படிந்து உம்மோடு ஒன்றி விடுகின்றவரும் ஆகிய எல்லாரும் பிளேக்கிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று இறைவன் என்னை நோக்கி கூறியுள்ளான். மற்றவர்களை விட அதிகமாக இறைவனது உதவி இந்த கூட்டத்தினர் மீது இருப்பதையும் இதன் உதாரணம் எங்கும் காணப்படாத அளவுக்கு அவன் தனது சிறந்த கருணையால் இவர்களை காப்பாற்றியிருக்கின்றான் என்பதையும் மக்கள் இறுதியில் ஆச்சரியத்துடன் ஒப்புக் கொள்வார்கள்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

لَنۡ يُّصِيۡبَنَاۤ اِلَّا مَا كَتَبَ اللّٰهُ لَنَا ۚ هُوَ مَوۡلٰٮنَا ۚ وَعَلَى اللّٰهِ فَلۡيَتَوَكَّلِ الۡمُؤۡمِنُوۡنَ○

பொருள்: அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும். அவன் எங்கள் பாதுகாவலனாவான். மேலும், நம்பிக்கையாளர்கள் அவன் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும். *(9:51)*

மேலான ஆங்கில அரசானது தனது குடிமக்கள் மீதுள்ள கருணையால் மீண்டும் பிளேக் என்னும் நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக தடுப்பூசிக்கான ஏற்பாடுகளைச் செய்ததற்காகவும், மேலும் இறைவனது அடியார்களின் நலனுக்காக பல இலட்சக்கணக்கான பணச்செலவை அது ஏற்றுக் கொண்டதற்காகவும் அதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டியதாய் இருக்கிறது. உண்மையில் மகத்தான இந்தப் பணியினை நன்றியறிதலுடன் வரவேற்பது அறிவுள்ள மக்களின் கடமையாகும். தடுப்பூசியைப் பற்றி தவறான எண்ணம் கொள்பவன் பெரும் அறிவீனனும் தனக்குத் தானே பகைவனும் ஆவான். ஏனெனில், முன்னெச்சரிக்கையுடன் செயல்படும் இந்த அரசு அபாயகரமான மருத்துவமுறைகளைக் கடைபிடிக்க விரும்புவதில்லை என்பதும், இப்படிப்பட்ட விஷயங்களில் எந்த திட்டம் உண்மையில் பயனளிக்கக் கூடியது என பல்வேறு அனுபவங்களுக்குப் பிறகு நிரூபணமாகின்றதோ அதனையே எடுத்துரைக்கின்றது என்பதும் பலமுறை அனுபவங்களால் தெளிவாகியுள்ளன. உண்மையில் அந்த நலனுக்காக இந்த அரசு இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கின்றதோ அல்லது செலவு செய்யவிருக்கின்றதோ இதனால் அந்த அரசுக்கு ஏதாவது உள்நோக்கம் இருக்க வேண்டும் என்று சிலர் கூறுவது பகுத்தறிவுக்கும் மனிதத் தன்மைக்கும் அப்பாற்பட்டதொரு விஷயமாகும். ஆகவே, தவறான எண்ணம் கொள்ளும் இம்மக்கள் நற்பேறிழந்தவர்களாயிருக்கிறார்கள்.

இதுவரை இவ்வுலகில் பயன்படுத்தப்பட்ட திட்டங்களில் இந்த மேலான அரசு பயன்படுத்துகின்ற தடுப்பூசி போடும் திட்டமே மிகச் சிறந்த திட்டமாகும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. மேலும், இந்தத் திட்டத்தால் பலன் உண்டானதை எந்த விதத்திலும் மறுக்க முடியாது. பௌதீக சம்பந்தமான வழிமுறைகளைக் கடைபிடிக்கும் எல்லா குடிமக்களும் இதன்படி செயல்பட்டு அவர்களின் உயிர் குறித்து அரசிற்கு இருந்து வரும் கவலையிலிருந்து அதனை விடுவிக்க வேண்டியது அவர்களின் முக்கிய கடமையாகும். ஆனால், எங்களுக்கு வானத்தின் தடை மட்டும் இல்லாமலிருந்தால் குடிமக்களில் எல்லாரையும் விட முதலாவதாக நாங்களே எங்களுக்குத் தடுப்பூசி போடுமாறு கூறியிருப்போம் என்பதனை நன்மை புரிந்து வரும் இந்த அரசிற்கு மிகவும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வானத்தில் தடை என்னவெனில் இக்காலத்தில் மனித குலத்திற்காக கருணை பற்றி வானத்தின் ஓர் அடையாளத்தை வெளிப்படுத்த இறைவன் நாடியுள்ளான். ஆகவே, நீரும் உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருப்பவரும் இறையச்சத்துடன் முழுமையாக உம்மைப் பின்பற்றியவாறு உமக்கு கீழ்ப்படிந்து உம்மோடு ஒன்றி விடுகின்றவரும் ஆகிய எல்லாரும் பிளேக்கிலிருந்தும் காப்பாற்றப்படுவார்கள் என்று இறைவன் என்னை நோக்கிக் கூறியுள்ளான்.

சமுதாயங்களுக்கிடையில் அவன் வேறுபாட்டை எடுத்துக் காட்டுவதற்காக இந்த கடைசி நாட்களில் இது இறைவன் புறமிருந்து வந்த ஒரு மகத்தான அடையாளமாகும். எனினும், எவரொருவர் முழுமையாக உம்மைப் பின்பற்ற மாட்டாரோ அவர் உம்மைச் சார்ந்தவர் அல்லர். ஆகவே அவரைப் பற்றி நீர் கவலை கொள்ள வேண்டாம் என்றும் அவன் கூறியுள்ளான். இது இறைவனின் தீர்ப்பாகும். இக்காரணத்தால் நாம் நமக்காகவும் நமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கக் கூடிய எல்லாருக்காகவும் தடுப்பூசி போட எவ்வித அவசியமுமில்லை. ஏனெனில் இப்போது நான் விவரித்ததைப் போல் இன்றிலிருந்து சில காலங்களுக்கு முன்னர் வானங்களுக்கும் பூமிக்கும் உரிமையாளனும் எல்லா பொருள் பற்றிய ஞானமும் அதிகாரமும் உடையவனுமான இறைவன் எனக்கு உம்மையும் உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கக் கூடிய ஒவ்வொருவரையும் அவர் எல்லா விதமான எதிர்ப்பு எண்ணங்களையும் விட்டு விட்டு முழுமையான மனத்தூய்மை -யுடனும் கட்டுப்படுதலுடனும் பணிவுடனும் பைஅத் என்னும் ஒப்பந்தம் செய்து இந்த இயக்கத்தில் நுழைபவரையும், இறைவனது கட்டளைகளுக்கும் அவனால் நியமிக்கப்பட்டவருக்கு முன் எவ்வகையிலும் தற்பெருமை, கீழ்ப்படியாமை, இறுமாப்பு, அலட்சியம், பிடிவாதம், சுயநலம் இவற்றைக் கடைப்பிடிக்காதவரையும், போதனைகளுக்கு ஏற்ற செயல்களைக் கொண்டவராக இருக்கின்ற அனைவரையும் பிளேக் நோயினால் மரணிப்பதிலிருந்து நான் காப்பாற்றுவேன் என்று வஹி (இறை வெளிப்பாடு) இறக்கியுள்ளான். மேலும், பொதுவாக மக்கள் நாய்கள் போல் மரணிக்கும் அளவுக்கு பேரழிவை உண்டாக்கக் கூடிய மேலும், துக்கத்தாலும் கவலையாலும் அவர்களை பைத்தியக்காரர்களாக்கி விடும் அளவிலுள்ள பிளேக் நோய் காதியானில் வராது என்றும் அவன் என்னை நோக்கி கூறியுள்ளான். ஆனால், இவர்களில் எவராவது இறைவனோடு செய்து கொண்ட தங்களது உடன்படிக்கையில் முழுமையாக நிலைத்திருக்க மாட்டார்களாயின் அல்லது இவர்களைப் பற்றிய ஏதாவது மறைவான காரணம் இறைவனது அறிவில் காணப்படுமாயின் அவர்களுக்கு பிளேக் நோய் உண்டாகலாம்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று பெருநாளாகும். மகிழ்ச்சியின் நாளாகும். இறைவன் மனிதனின் இயல்பை கருத்தில் கொண்டவாறு பெருநாளின் மகிழ்ச்சியை கொண்டாடுவதற்கான நாளை நிர்ணயித்துள்ளான். இதனால்தான் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நாம் மகிழ்ச்சியை கொண்டாடுகின்றோம். ஏனைய சமுதாயங்களும் மதங்களும் கூட இந்த மனிதனின் இயல்பிற்கேற்ப தமது மகிழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்கான நாட்களை நிர்ணயித்திருக்கின்றன. ஆனால் அந்த சமுதாயங்களின் மகிழ்ச்சியின் நாட்களில் இஸ்லாத்தில் ஒன்று கூடுவதினால் காணப்படுகின்ற அந்த ஒரு பண்பு இருப்பதில்லை. அதே நாளில் ஒரு தொழுகையும் அதிகப்படியாக இருக்கின்றது. அல்லாஹ்விற்குரிய உரிமையைச் செலுத்துவதற்காக பொதுவான நாட்களில் நாம் இறை வணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றோம். கடமையான ஐந்து வேளை தொழுகைகளை தொழுகின்றோம். அதே சமயத்தில் பெருநாளன்று அந்த மகிழ்ச்சியை கொண்டாடுகின்ற அந்த நாளில் நம் மீது ஆறு தொழுகைகள் கடமையாகி விடுகின்றது.

---

முஸ்லிம் என்ற நிலையில் அல்லாஹ் தனக்குரிய உரிமையைச் செலுத்துவதுடன் நாம் அடியார்களின் உரிமையைச் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதை நம் மீது அவன் கடமையாக்கியிருக்கின்றான். தமது சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதுடன் அமைதி, அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தியை எல்லா பக்கமும் பரப்புவதும், சமுதாயத்தில் அன்புடனும் நேசத்துடனும் வாழ்வது, ஒருவர் மற்றவரது உரிமைகளைச் செலுத்தியவாறு இருப்பது உண்மையான பெருநாளின் மகிழ்ச்சியைக் கொண்டாடும்போது இதன் பக்கமும் நாம் முயற்சி செய்ய வேண்டும். சொந்த மகிழ்ச்சியுடன் மட்டும் நின்று விடாமல் நமது சுற்றுச் சூழலில் உள்ளவர்களுக்கும் கூட ஒவ்வொரு மட்டத்திலும் நாம் மகிழ்ச்சியை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

மார்க்கத்தின் முழுமையயான பகுதி இரண்டாகும். ஒன்று, இறைவன் மீது அன்பு கொள்வதாகும். மற்றொன்று, மனித இனத்தின் மீது அன்பு கொள்வதாகும். மனித இனத்தின் மீது எந்த அளவு அன்பு கொள்ள வேண்டும் என்றால், அவர்களின் துன்பத்தை தமது துன்பமாகக் கருத வேண்டும். மேலும் அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதன் பல்வேறு தகுதிகளைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் பெருநாளின் சந்தர்ப்பத்தில் குறிப்பாக அல்லாஹ்விற்குரிய உரிமைகளைச் செலுத்துவதுடன் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வலியுறுத்தி அறிவுரைகளைக் கூறினார்கள்.**

---

நாம் எல்லா மட்டத்திலும் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் முயற்சி செய்ய வேண்டும். உண்மையில் இவைதான் பெருநாளின் உண்மையான மகிழ்ச்சிகளைப் பெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குகின்றன. அல்லாஹ் நமக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் உண்மையான முறையில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆவோமாக. அவனை வணங்குவதற்கான உரிமைகளையும் செலுத்துபவர்களாக நாம் ஆவோமாக. அவனது அடியார்களுக்குரிய உரிமையையும் செலுத்துபவர்களாக நாம் ஆவோமாக.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26 ஜூன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **26 -ஆம் தேதி** ஆற்றிய **ஈதுல் ஃபித்ர் உரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இன்று பெருநாளாகும். இது மகிழ்ச்சியின் நாளாகும். இறைவன் மனிதனின் இயல்பைக் கருத்தில் கொண்டவாறு பெருநாளின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கான நாளை நியமித்திருப்பதால் அவனது கட்டளைக்கேற்ப நாம் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம். மனிதனின் இயல்பும் அவன் தமது மக்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டும் என்பதை விரும்புகின்றது. மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலுள்ள சந்தர்ப்பம் கிடைப்பதற்காக அத்தகைய நிலைமைகள் உருவாக வேண்டும் என்றும் விரும்புகின்றது. மற்ற சமுதாயங்களிலும் மதங்களிலும் கூட மனிதனுடைய இந்த இயல்புக்கேற்ப தமது மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்கான நாள் நியமிக்கப்பட்டிருப்பதை உலகில் நாம் பார்க்கின்றோம். ஆனால் இஸ்லாத்தில் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக நாம் எவ்வாறு ஒன்று திரள்கின்றோமோ அதுபோன்று அந்த சமுதாயங்களில் மகிழ்ச்சியின் நாட்களில் மக்கள் ஒன்று திரள்வதை பார்க்க முடிவதில்லை.

இஸ்லாத்தில் பெருநாள் கொண்டாடப்படுவதும், மகிழ்ச்சிக்குரிய நாளும் தனிச்சிறப்பு மிக்கதாக இருக்கின்றது. அந்நாளில் பெருநாள் குத்பா கொடுக்கப்படுவதும் பெருநாள் தொழுகையும் அதிகப்படியாக பேணப்படும் ஒரு விஷயமாக இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் பெருநாள் குத்பா பேருரை நிகழ்த்தியதன் மூலம் எங்கு மக்கள் பெருநாளின் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றனரோ அங்கு இறைவன் கூறுகின்ற விஷயங்களைக் கேட்பதற்கும் அவனை வணங்குவதற்காகவும் ஒன்று சேர வேண்டும் என்பதையும் நடைமுறைப்படுத்தி காட்டியுள்ளார்கள். அல்லாஹ் மனிதன் மீது என்னென்ன பொறுப்புகளை சுமத்தியுள்ளானோ அவற்றை அவன் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

அந்த பொறுப்புகள் என்ன? ஒன்று அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவது. மற்றொன்று அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதாகும். அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்துவதற்காக பொதுவாக நாம் மற்ற நாட்களில் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றோம். கடமையாக்கப்பட்ட ஐவேளை தொழுகைகளை தொழுகின்றோம். அதே சமயத்தில் பெருநாள் அன்று மகிழ்ச்சியை நாம் கொண்டாடுவதுடன் நம்மீது ஆறு தொழுகைகள் கடமையாக்கப்பட்டிருக்கின்றன. இது பெருநாள் ஆகும். இதில் மகிழ்ச்சியைக் கொண்டாடுவது விளையாட்டிலும் கேளிக்கையிலும் ஈடுபடுவது ஆகியவற்றிற்கான நாளாக இருக்கும்போது இந்த நாட்களில் தொழுகைகளையும் பேண வேண்டுமா? என்றே ஓர் உலகவாதி கூறுவார்.

ஆனால் நம்பிக்கை கொண்ட ஒருவர் அல்லாஹ்வை வணங்குவதிலும் அவனுக்கு நன்றி செலுத்துவதிலும்தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கின்றது என்று கருதுகின்றார். அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்துவதுடன்

*(தொடர்ச்சி 8-வது பக்கம்...)*

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் ஜாஃபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் பரிவுடன் நடந்து கொண்டது தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக் கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்தக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது துஆவினால் அவர்களது தோட்டத்தில் பழங்கள் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில் அதிகமாக கிடைத்தது. அதில் அருள் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு சிறப்பான ஏற்பாட்டை செய்யுமாறு ஹஸ்ரத் ஜாஃபிர் (ரலி) அவர்களிடம் வலியுறுத்திக் கூறினார்கள்.**

**சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய பிலால் அதீல்பீ சாஹிப் அவர்களும், சராச்சி ஜமாஅத்தின் முன்னாள் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வான சலீமா மீர் சாஹிபா அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹுமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**30 மார்ச் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **30 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் அவர்களின் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் என்ற சஹாபியின் நற்குறிப்பு தொடர்பாக சில ஜுமுஆக்களுக்கு முன் நான் கூறியிருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாருடைய ஷஹாதத்திற்குப் பிறகு கூறினார்கள்: அன்னாரிடம் உமது விருப்பம் என்னவென்று கூறும்! நான் அதனை முழுமை செய்கின்றேன் என அல்லாஹ் கூறினான். அதற்கு அவர், அல்லாஹ்வே! நான் மீண்டும் உயிர் பெற்று பூமிக்கு அனுப்பபட வேண்டும். பின்னர் மீண்டும் உனது வழியில் ஷஹீதாக வேண்டும். இதுவே எனது விருப்பம் ஆகும் எனக் கூறினார். அது அல்லாஹ்வின் நடைமுறைக்கு எதிரானதாகும். எனவே அல்லாஹ், அது நடக்காது; ஏனென்றால், மரணித்தவர்கள் மீண்டும் பூமிக்கு அனுப்பப்படுவ –தில்லை. (சுனன் திர்மிதி. அப்சுவாபு த.ஃப்ஸீருல் குர்ஆன் பாபு வ மின் சூரதி ஆலி இம்ரான் ஹதீஸ் 3010)

அதை தவிர்த்து வேறு விருப்பம் இருந்தால் கூறும் என்று அல்லாஹ் கூறினான்.

எவ்வாறிருப்பினும், இதிலிருந்து அன்னாருடைய தியாகத்தின் தரம் மற்றும் அன்னாருடனான அல்லாஹ்வின் அசாதாரண பரிவு பற்றி தெரிய வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் மகத்துவமிக்க அந்தஸ்தைப் பெற்றிருந்த சஹாபியின் மகன் ஆவார்கள். சிறு வயதிலேயே இரண்டாவது பைஅத்தே உக்பாவின் போது பைஅத் செய்திருந்தார்கள். (அஸதுல் கஅபா தொகுதி 1 பக்கம் 492. ஜா.ஃபிர் பின் அப்துல்லாஹ் பின் ஹராம். பைரூத்திலுள்ள தாருல் இல்மிய்யாவில் 1996 -ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் (ரலி) அவர்களின் சம்பவம் தொடர்பாக இவ் விஷயம் கூறப்பட்டது. அன்னார் தனது மகனிடம், நான் ஒரு யூதரிடம் கடன் வாங்கியுள்ளேன். எனது ஷஹாதத்திற்குப் பிறகு தோட்டத்தின் பழங்களை விற்பனை செய்து கடனை அடைத்து விடவும் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் ஜனாயிஸ் பாபு ஹல் யஹ்ருஜுல் மய்யிது பினல் கபரி வல்லெஹதி அஹில்லதுன் ஹதீஸ் 1351)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் தனது தந்தையின் வழிகாட்டுதலின்படி அமல் செய்து கடனைத் திரும்பிச் செலுத்தினார்கள். அது மட்டுமல்ல; அக்காலத்தில் இந்த நடைமுறை இருந்தது. அதாவது, தோட்டங்கள் மற்றும் விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு தனது செலவீனத்தை முழுமை செய்வதற்கு கடன் வாங்கி வந்தார்கள்.

அது தொடர்பான விரிவான ஒரு சம்பவம் உள்ளது. அன்னார் கடனை திரும்பிக் கொடுக்கும் சமயத்தில் யூதரிடம் கூறினார்கள்: இம்முறை விளைச்சல் குறைவாக உள்ளதால் வருமானம் குறைவாகவே இருக்கும். ஆகையால் கடனை திரும்பிச் செலுத்த சில சலுகைகளைச் செய்யவும் எனக் கூறினார்கள். இம்முறை பாதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அடுத்த வருடம் மீதியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அந்த யூதர் எவ்வித சலுகையையும் வழங்க மாட்டேன் எனக் கூறி மறுத்து விட்டார். எனவே, இந்த கவலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதரிடம் பரிந்துரை செய்தார்கள். ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது அந்த சஹாபியின் கடனை அடைக்கும் விவகாரத்தில் எவ்வாறு பரிவுகாட்டி துஆ செய்தார்கள் என்றால், அதன் விளைவாக அல்லாஹ் எவ்வாறு அருள் செய்தான்? என்பது தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. நான் இங்கு இதனையும் கூறிக் கொள்கிறேன். சிலர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அதாவது ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் தந்தையின் கடனை திரும்பிச் செலுத்துவது தொடர்பாக இந்த சம்பவத்தைக் குறிப்பிடுகின்றனர். அன்னார் தனது கடனை திருப்பிச் செலுத்துவது தொடர்பாக அறிவுரை செய்திருந்தார்கள். அதனை குறிப்பிடுகின்றனர். எவ்வாறிருப்பினும் அப்போது விளைச்சல் குறைவாக இருந்தது. அதனால் அந்த கடனை அடைப்பதில் சிரமம் ஏற்பட்டது. பின்னர் நான் கூறியது போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை விஷயம் சென்றடைந்தது. ஆனால் புகாரியில் வரும் அறிவிப்பிலிருந்து, இது பின்பு ஒரு தருணத்தில் நிகழ்ந்த சம்பவம் என தெரிய வருகின்றது. எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபியின் மீது காட்டிய பரிவும் அன்னாரின் துஆவின் மூலம் நிகழ்ந்த அற்புதமும் இந்த சம்பவத்திலிருந்து வெளிப்படுகின்றது.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மதீனாவில் ஒரு யூதர் இருந்தார். அவர் எனது பேரீட்சை பழத் தோட்டத்தின் விளைச்சல் தயாராகும் வரை எனக்கு கடன் வழங்கி வந்தார். எனது அந்த நிலம் ரோமா என்ற பெயருடைய கிணற்றின் வழியில் இருந்தது. ஒரு வருடம் கழிந்தது. ஆனால், விளைச்சல் குறைவாகவே இருந்தது. முழுமையாக விளையவுமில்லை. அறுவடை சமயத்தில் வழக்கம்போல் அந்த யூதர் தனது கடனை வசூல் செய்ய வந்தார். ஆனால், நானோ அந்த வருடம் எந்த பழத்தையும் அறுவடை செய்யவில்லை. நான், மேலும் ஒரு வருடம் காலக்கெடு வழங்கும்படி வேண்டினேன். ஆனால், அவர் நிராகரித்து விட்டார். எப்படியாவது இந்த முழு தோட்டத்தையும் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது.

அந்த சம்பவத்தைப் பற்றிய தகவல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. அன்னார் சஹாபிகளிடம் கூறினார்கள்: வாருங்கள்! நாம் ஜாபிருக்காக அந்த யூதரிடம் பரிந்துரை செய்து காலக்கெடு வழங்கும்படி கூறுவோம் என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சில சஹபாக்களுடன் எனது தோட்டத்திற்கு வந்தார்கள். பின்னர் அந்த யூதரிடமும் பேசினார்கள். அதற்கு அந்த யூதர் அபுல் காஸிம்! நான் இவருக்கு காலக்கெடு வழங்க மாட்டேன் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். யூதரின் இந்த செயலைக் கண்டு அன்னார் அந்த தோட்டத்தை ஒருமுறை சுற்றி வந்தார்கள். பின்னர் வந்து மீண்டும் யூதரிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் அவரோ மீண்டும் நிராகரித்து விட்டார்.

இதற்கிடையில் நான் தோட்டத்திலிருந்து சிறிது பேரீச்சம் பழங்களைப் பறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சமர்ப்பித்தேன். அன்னார் அதை சாப்பிட்ட பிறகு கூறினார்கள்: ஜாபிர்! இங்கு உமது தோட்டத்தில் ஓய்வெடுப்பதற்கென்று ஒரு சிறிய குடிசை இருக்குமே அது எங்கே? எனக் கேட்டார்கள். நான் அந்த இடத்தைக் கூறினேன். எனக்காக அங்கு விரிப்பை விரியுங்கள் நான் சிறிது ஓய்வெடுக்க வேண்டும் என்று கூறினார்கள். நானும் அப்படியே செய்தேன். அன்னார் கண் விழித்தபோது பின்னர் மீண்டும் நான் உள்ளங்கை நிறைய பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்தேன். அதிலிருந்து அன்னார் சிறிது சாப்பிட்டார்கள். பின்னர் எழுந்து சென்று அந்த யூதரிடம் மீண்டும் பேசினார்கள். ஆனால், அவரோ சம்மதிக்கவில்லை. பின்னர் மீண்டும் தோட்டத்தை வலம் வந்தார்கள். பின்னர் கூறினார்கள்: இப்போது

பழங்களை தோட்டத்திலிருந்து அறுவடை செய்து யூதரின் கடனை அடையுங்கள் எனக் கூறினார்கள். நானும் பழத்தை அறுவடை செய்தேன். அப்போது சிறிது நேரம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோட்டத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள். நான் பழங்களை முழுமையாக அறுவடை செய்து கடனை அடைத்து விட்டேன். அதன் பின்னரும் சிறிது பேரீச்சம் பழங்கள் எஞ்சியிருந்தன. நான் ஹுஸூர் (அலை) அவர்களிடம் இந்த நற்செய்தியைக் கூறினேன். அதற்கு அன்னார், நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என சாட்சி பகர்கிறேன் என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி. கிதாபுல் அத்இமா பாபு ரத்பிவ் வஸ்ஸிமா ஹதீஸ் 5443)

அல்லாஹ் எனது துஆவினை ஒப்புக் கொண்டதன் விளைவாகவே இந்த அற்புதம் மற்றும் அசாதாரணமான சம்பவம் நிகழ்ந்தது. அல்லாஹ் எனது பணிகளில் அருள் செய்கின்றான் என்று கூறினார்கள்.

ஆக, எங்கு இந்த சம்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிவு மற்றும் அன்னாரின் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதன் விளைவாக விளைச்சலின் பரக்கத் ஏற்பட்டத்தை நாம் காண்கிறோமோ, அங்கு கடனை திரும்பிச் செலுத்த வேண்டுமே என்ற எண்ணத்தில் சாஹாபியின் நிம்மதியின்மையும் தெரிய வருகின்றது. இந்த ஆன்மாவே ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் தனித்துவமாக இருக்க வேண்டும். சில முறை நமது சமூகத்தில் இது தென்படுகின்றது. அஹ்மதியாக இருந்தும் அதுபற்றி கவலைப்படுவதில்லை. கடனை திரும்பி கொடுக்கும் விஷயத்தில் தட்டிக் கழிக்கின்றனர். கடனை திருப்பிக் கொடுப்பதில் வருடங்கள் கடந்து விடுகின்றன. எனவே, நாமும் நினைவில் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சொற்களை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: "என்னிடம் பைஅத் செய்த பிறகு சஹாபாக்களின் முன்மாதிரிகளை நீங்கள் செயல்படுத்திக் காட்டுங்கள். அதன் மூலமே மஹ்தி மற்றும் மஸீஹின் வருகையின் மூலம் நிலைபெற வேண்டிய அழகிய சமூகம் உருவாக முடியும்." (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 413)

கடனை திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் ஜாபர் அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. ஆனால், அதற்கு முன்னர் நான் இந்த சம்பவத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன். சில அறிவுப்புகளில் வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் அவர்களின் கடன் அடைக்கப்பட்ட தகவல் அறிந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அங்கு வருகை தந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஜாபிரிடம் என்ன நடந்தது? எனக் கேளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அதற்கு அவசியமில்லை. ஏனென்றால், தாங்கள் முதல் முறை தோட்டத்தை சுற்றி வந்த போதே கடன் முழுவதும் அடைபட்டு விடும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது. தாங்கள் இரண்டாவது முறை வலம் வந்தபோது எனது உறுதி மேலும் வலுவடைந்தது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி. கிதாபுல் இஸ்திக்ராஸ் பாபு இதா கஸா அவ் ஜாஸிகா ஃபித்தீனி ஹதீஸ் 2396)

நான் கூறியது போன்று கடனை திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. ஒரு சஹாபிக்கு கடனாக இரண்டு தினார்கள் இருந்தது. அந்நிலையில் அவரது மரணம் நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழ வைக்க மறுத்து விட்டார்கள். இன்னொரு சஹாபி அந்த கடனிற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் எனக் கூறியதன் விளைவாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜஸாசா தொழ வைத்தார்கள். அடுத்த நாள் பொறுப்பேற்றுக் கொண்ட அந்த சஹாபியிடம் இரண்டு தினார் கடனை திரும்பிச் செலுத்த நீங்கள் பொறுப்பேற்றிருந்தீர்களே? அதனை திருப்பிக் கொடுத்தீர்களா? இல்லையா? எனக் கேட்டார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 104-105 ஹதீஸ் 14590. முஸ்னது ஜாஃபிர் பின் அப்துல்லாஹ். பைருத்திலுள்ள ஆலமல் குதுபில் 1998 -ல் அச்சிடப்பட்டது)

இதுவே கடனை திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவம் ஆகும். ஒரு கவலை இருக்க வேண்டும்.

ஆனால் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களிடம் இருந்து இந்த அறிவிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர்கள் செல்வத்தை விட்டுச் சென்றால் அது அவரது குடும்பத்தினருக்கு கிடைக்கும். அவர் விட்டுச் சென்ற சொத்து அவர்களுக்கு கிடைக்கும். ஒருவர் கடனை விட்டுச் சென்று சொத்துக்களையும் விட்டுச் சென்றால், மேலும் விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து கடன் அடைபடவில்லை என்றால் அல்லது ஆதரவற்ற பிள்ளைகளை விட்டுச் சென்றால் அந்த ஆதரவற்ற பிள்ளைகளை கவனிக்கவும் கடனை திருப்பி செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (ஸஹீஹ் முஸ்லிம். கிதாபுல் ஜுமுஆ பாபு தஹ்ஃபீபுஸ் ஸலாத்து வல்குத்பதி ஹதீஸ் 2005)

அதாவது, அரசாங்கமும் பொறுப்பான மக்களும் அந்த பணியைச் செய்வார்கள். அனாதைகளின் பராமரிப்பு மற்றும் அவர்களின் செலவீனங்களுக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு இஸ்லாத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்டுள்து. அதன் காரணமாகவே அது அரசாங்கத்தின் கடமையாகும் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இரண்டு வேறுபட்ட அறிவிப்புகள் உள்ளன. ஓரிடத்தில் 2 தினார்கள் கடன் வைத்து மரணித்தவரின் ஜனாஸா தொழ வைப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள். மற்றொரு சம்பவத்தில் கடனை திருப்பிச் செலுத்துவது அரசாங்கத்தின் கடமை என்று கூறினார்கள். முற்றிலும் மாறுபட்ட தருணங்களில் கூறப்பட்ட விஷயங்கள் எனத் தெரிகின்றது. முதல் சம்பவம், காரணமின்றி கடன் வாங்குபவர்களுக்கு கவனமூட்டுவதற்காக கூறியதாகும். கடனை திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்கி மரணித்தவரின் உறவினர்கள் அந்த பொறுப்பை ஏற்க வேண்டும் எனக் கூறினார்கள். அடுத்து இரண்டாவது சந்தர்ப்பத்தில் அனாதைகளின் பராமரிப்பு மற்றும் மரணித்தவரின் சொத்திலிருந்து அவரது கடன் அடைபடவில்லை என்றால் அதனை அரசாங்கம் திருப்பிச் செலுத்த வேண்டும் எனக் கூறினார்கள். இதுவே இஸ்லாமிய அரசாங்கத்திற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்பித்த பாடமாகும். எனவே, இஸ்லாமிய அரசாங்கங்கள் தமது குடிமக்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக இன்று மிகவும் அதிகமாக இஸ்லாமிய அரசாங்கங்களால் குடிமக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஜாபர் (ரலி) அவர்களின் மற்றுமொரு அறிவிப்பு உள்ளது. அறிவிப்பாளர் அறிவிக்கிறார். நான் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் என்ற அன்ஸாரி சஹாபியிடம் ஒருமுறை சென்றேன். மேலும், நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து செவியுற்ற ஒரு விஷயத்தை எடுத்துரை –யுங்கள் எனக் கேட்டேன். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஒரு பயணத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அறிவிப்பாளர் கூறுகின்றார். அந்த பயணம் போருக்கான பயணமாக இருந்ததா? அல்லது உம்ராவிற்கான பயணமாக இருந்ததா? என எனக்கு தெரியாது. நாங்கள் மதீனாவின் பக்கம் திரும்பியபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தனது குடும்பத்தினரிடம் விரைந்து செல்ல விரும்புபவர் விரைந்து சென்று விடட்டும் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதை செவியுற்றதும் நாங்கள் விரைந்து செல்லத் தொடங்கினோம். நான் எனது ஓர் ஒட்டகத்தில் அமர்ந்திருந்தேன். அது காக்கி நிறமாக இருந்தது. அதில் எந்த வடுவும் இல்லாதிருந்தது. எனக்குப் பின்னர் மக்கள் இருந்தனர். நான் விரைந்து சென்று கொண்டிருந்தபோது ஓரிடத்தில் ஒட்டகம் அமர்ந்து விட்டது. எழுந்து செல்ல மறுத்து விட்டது. நான் எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை கண்டபோது ஜாபிரே! மிக உறுதியுடன் அதன் மீது அமருங்கள் என்று கூறி தனது சாட்டையால் ஒட்டகத்திற்கு ஓர் அடி கொடுத்தார்கள். அப்போது அந்த ஒட்டகம் துள்ளிக் குதித்து ஓடத் தொடங்கியது. அதன் பிறகு மிக விரைவாக அது சென்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த ஒட்டகத்தை விற்கப் போகிறீரா? எனக் கேட்டார்கள். அதற்கு நான், ஆம்! நான் விற்க விரும்புகிறேன் எனக் கூறினேன். நாங்கள் மதீனாவை வந்தடைந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது பல சஹாபாக்களுடன் பள்ளிவாயிலில் நுழைந்தார்கள். நானும் ஒட்டகத்தை பள்ளிவாயிலுக்கு முன் ஓரிடத்தில் கட்டிப் போட்டு விட்டு அன்னாருடன் சென்றேன். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இது உங்களுடைய ஒட்டகம் ஆகும் என்று கூறினேன். அன்னார் பள்ளிவாயிலை விட்டு வெளியேறி இங்குமங்கும் பார்த்துவிட்டு ஒட்டகத்தை நோக்கி கூறினார்கள். இந்த ஒட்டகம் எமது ஒட்டகம் ஆகும். அதற்கு பகரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பல தங்கக் காசுகளை அனுப்பி வைத்து இதை ஜாபரிடம் கொடுத்து விடுங்கள் என கூறினார்கள். பின்னர் நீங்கள் இதன் முழுமையான விலையைப் பெற்று விட்டீர்களா? எனக் கேட்டார்கள். நான், ஆம்! எனக் கூறினேன். அதற்கு இந்த தொகையும் இந்த ஒட்டகமும் உம்முடையதாகும் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி. கிதாபுல் ஜிஹாது பாபு மன் ஸரப தாப்பதி கைரிஹி ஃபில் கஸ்வி ஹதீஸ் 2681)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பரிவின் வெளிப்பாடாக ஒட்டகத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அதற்கான தொகையையும் செலுத்தினார்கள்.

ஓர் அறிவிப்பில் தெரிய வருகின்றது. அந்த ஒட்டகம் தண்ணீர் எடுத்து வரப் பயன்பட்டது. மேலும், ஹஸ்ரத் ஜாபர் அவர்களின் மாமாவும் ஏனைய உறவினர்களும் அதனை பயன்படுத்தி வந்தனர். அவர்கள் ஹஸ்ரத் ஜாபர் அவர்களிடம் ஏன் ஒட்டகத்தை விற்றாய்? இனி நாம் தண்ணீர் எப்படி எடுத்து வருவோம்? என ஆட்சேபனை செய்தார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் ஜிஹாது பாபு இஸ்தி'.பா அனிர்ரஜுலி வல் இமாமி ஹதீஸ் 2967)

இந்த காரணத்தாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தை திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் சஹாபாக்களின் மீது அதிலும் சிறப்பான தியாகங்கள் செய்திருந்த சஹாபாக்கள் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பரிவு காட்டினார்கள். அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. நான் பல்வேறு சம்பவங்களை எடுத்துரைத்து வருகிறேன். அவர்களின் முன்மாதிரிகளைப் பேணுவதற்கு அல்லாஹ் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

இந்த சுருக்கமான குத்பாவிற்குப் பிறகு இனி நான் இரண்டு நல்லடியார்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். முதலாம் நபர் மதிப்பிற்குரிய சிரியா நாட்டைச் சார்ந்த பிலால் அதீல் சாஹிப் ஆவார். இவர்கள் கடந்த நாட்களில் நடந்த கார் விபத்தில் படுகாயமடைந்தார்கள். பின்னர் மார்ச் மாதம் 17 ஆம் தேதி இரவு 1.30 மணியளவில் இதயத்துடிப்பு நின்று போனதன் விளைவாக மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

பிலால் சாஹிப் 1978 –ல் பிறந்தார்கள். அன்னாரின் வயது 17 ஆக இருந்தபோது அன்னாரின் சகோதரர் ஒருவர் அஹ்மதி டாக்டர் முஸல்லிம் அத்தரபி அவர்களின் கம்பெனி ஒன்றில் வேலை வாங்கிக் கொடுத்தார். அங்கு அஹ்மதிகளுடன் பழகவும் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகமும் அவருக்கு கிடைத்தது. சிறிது காலம் கழித்து அவர் பைஅத்தும் செய்து விட்டார்.

டாகடர் சாஹிப் கூறுகின்றார்கள்: சிரியாவில் 2010 முதல் பல்வேறு அஹ்மதிகளின் வீடுகளின் தொழுகை நடத்தி வந்தோம். இந்த வருடம் நாங்கள் காதியானிலிருந்து திரும்பியவுடன் பிலால் சாஹிபின் வீட்டில் தொழுது வந்த குழுவினருடன் சேர்ந்து நானும் தொழுது வந்தேன். அன்னார் என் மூலமாக பைஅத் செய்திருந்தார்கள். எனவே, என்னை உணர்ச்சி பொங்க வரவேற்றார்கள். விருந்து உபசரிப்பு அன்னாரின் பழக்கமாக இருந்தது. ஆயினும், உங்கள் மூலமாக எனக்கு அஹ்மதிய்யத்தில் பயணிக்கும் பாதை கிடைத்தது என நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்கள்.

அன்னார் தொடர்பாக ஜமாஅத்தின் சத்ர் சாஹிப் எழுதுகின்றார்கள்: பிலால் சாஹிப் Sports Garments கடை ஒன்றை நடத்தி வந்தார்கள். தேவையுடைய அனைத்து சகோதரர்களுக்கும் உதவி செய்து வந்தார்கள். தமது கடையில் துணி இல்லாமல் போனாலும் கூட வெளியிலிருந்து விலைக்கு வாங்கி தேவையுடையவருக்கு கொடுத்து விடுவார்கள். உடுத்த ஆடை இல்லாத நிலையில் எந்தவோர் அஹ்மதியையும் அன்னாரால் பார்க்க முடியாது. ஒருவருக்கு ஏதாவது கஷ்டம் நேரிட்டால் எல்லா வகையிலும் அவரின் கஷ்டத்தைப் போக்க முயற்சி செய்வார்கள். தமது பிள்ளைகளையும் சிறப்பாக பேணி வந்தார்கள். நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்து கல்வி கற்கச் செய்தார்கள்.

சத்ர் சாஹிப் கூறுகின்றார்கள்: மரணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன் நாங்கள் மர்ஹூமின் வீட்டில் தொழுதோம். அப்போது பிலால் சாஹிப் வஸிய்யத் சந்தா, தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் போன்ற அனைத்து சந்தாக்களையும் முழுமையாக செலுத்தி விட்டார் என பொருளாதாரச் செயலர் கூறினார். மேலும், ஒரு நிலம் ஒன்றை வாங்கியிருந்தார். அதனையும் அவர் வஸிய்யத்தில் இணைத்து விட்டார். நிரந்தரமாக தொடர்ந்த சந்தா கொடுக்கக் கூடியவராகவும் படைப்பின சேவை செய்யக் கூடியவராகவும் தொழுகைகளை மிகவும் பேணுபவராகவும் அன்னார் திகழ்ந்தார். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பும் தொடர்பும் வைத்திருந்தார். ஒவ்வொரு குத்பாவையும் மிக கவனமாக கேட்டு வந்தார். நான் குத்பாவின் சுருக்கத்தை எடுத்துரைக்கும்போது மர்ஹூம் முகத்தை மறைத்து அழுவார்கள். காலத்தின் கலீஃபா என்னை பற்றியே பேசுகின்றார்கள் என குத்பாவை செவியுற்று விட்டு கூறுவார். மர்ஹூம் தனது 11 வயது மகனையும் 12 வயது மகளையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அவரது மூத்த சகோதரர் அஹ்மதியாவார். ஜெர்மனியில் உள்ளார். மர்ஹூமின் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் அஹ்மதி கிடையாது. கடுமையான எதிர்ப்பும் செய்து வந்தனர். அன்னாரின் ஜனாஸா தொழுகைக்கான நேரம் வந்தபோது அவரது சகோதரரின் உள்ளத்தை மாற்றினான். அஹ்மதிகள் நீங்கள் ஜனாஸா தொழுங்கள். எங்களது மஸ்ஜிதில் வந்து கூட தொழுகை நடத்துங்கள் தவறில்லை எனக் கூறினார். அல்லாஹ்வின் அருளால் ஏராளமான அஹ்மதி அல்லாதவர்கள் எங்களுக்குப் பின்னால் தொழுதார்கள் எனக் கூறுகின்றார்கள்.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய கராச்சி லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் முன்னாள் தலைவி சலீமா மீர் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் அப்துல் காதிர் தார் அவர்களின் மனைவி ஆவார். அன்னாரும் மார்ச் 17 ஆம் தேதி 2018 ஆம் ஆண்டு தமது 90 –வது வயதில் மரணமடைந்தார்கள். அன்னாரின் தந்தை மீர் இலாஹி பக்ஷ் சாஹிப் சஹாபி ஆவார். அன்னார் 1904 –ல் பைஅத் செய்தார்கள். மர்ஹூமின் தாயார் மர்யம் பேகம் சாஹிபா பெண்களுக்கான காதியான் மதரஸாவிலிருந்து கல்வி பயின்றிருந்தார். திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கும் ஆர்வம் மிகைத்திருந்தது. 1946 சலீமா மீர் சாஹிபாவின் திருமணம் நடந்தது. இந்திய – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அன்னார் கராச்சியில் குடியேறினார்கள். 1961 –ல் அவரது குடும்பம் ஈரான் சென்றது. அங்கு ஓரிரு அஹ்மதி குடும்பமே இருந்தது. அவர்களுக்கான ஜுமுஆ மற்றும் இதர தொழுகைக்கான ஏற்பாட்டை மர்ஹூம் செய்தார்கள். 1964 –ல் அன்னாரின் கணவர் வஃபாத் ஆனார். அதன் பிறகு தனது சகோதரரான மீர் அமானுல்லாஹ் அவர்களுடன் கராச்சிக்கு திரும்பினார்கள். 8 பிள்ளைகளை பராமரிக்கும் பணியுடன் கல்வி கற்கவும் தொடங்கினார்கள். பி.ஏ. வரை படித்தார்கள். லஜ்னாவின் அலுவலகத்திலும் பணி செய்யத் தொடங்கினார். கடிதங்களுக்கு பதில் அனுப்பும் பணியை செய்து வந்தார். அடுத்து பல்வேறு ரீதியில் அன்னாருக்கு கராச்சி லஜ்னா இமாயில்லாவிற்கு தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்தது. 1981 –ல் லஜ்னா நிர்வாகக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டபோது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மர்ஹூமாவை அக்கமிட்டியின் தலைவியாக நியமித்தார்கள்.

மர்ஹூமா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபா என்னை கமிட்டியின் தலைவியாக அறிவித்தபோது எனது நிலை ஒரு வகையில் வினோதமானதாக இருந்தது. நான் இந்த பொறுப்பை எவ்வாறு சுமப்பேன்? என்று அச்சத்திற்குள்ளானேன். ஒரு பக்கம் காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதல்; மற்றொரு பக்கம் எனது இயலாமை. பெரிய அளவிலான பணிகள் செய்யக்கூடிய முன் அனுபவம் இல்லாததன் உணர்வு எனக்கு இருந்தது. நான் துஆவில் ஈடுபட்டேன். மன்றாடி இறைவனிடம் துஆ செய்தேன். பணியை துவங்கினேன் செயற்குழுவை உடனடியாக கூட்டினேன். கிராமப்புறங்களில் சுற்றுப்பயணம் செய்தேன். கட்டுப்படுதல், அமைப்புடன் தொடர்பு, இஸ்லாமிய நல்லொழுக்கங்களைப் பேணுதல், சடங்குகளுக்கு எதிராக ஜிஹாத் செய்வது, ஆகுமற்ற ஆட்சேபனைகளிலிருந்து முற்றிலும் விலகுதல் போன்ற விஷயங்களை அனைவருக்கும் கவனமூட்டினேன். சிலருக்கு வீண் ஆட்சேபனைகள் செய்யும் பழக்கம் உள்ளது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு அவ்வாறு செய்யும் பழக்கம் உள்ளது. தற்போது ஆண்களிடமும் அதிகமாகி விட்டது. காரணமேயின்றி ஜமாஅத் அமைப்பின் மீது ஆட்சேபனை செய்யத் துவங்கி விடுகின்றனர்.

மர்ஹூமா கூறினார்கள்: தேவையற்ற வீண் ஆட்சேபனைகள் செய்தல் கூடாது என பெண்களைத் தடுத்தார்கள். அதிகமாக பாவமன்னிப்புத் தேடுமாறு மீண்டும் மீண்டும் கவனமூட்டினார்கள். மேலும், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபாவிற்கும் கடிதம் எழுதி வந்தார்கள்.

மர்ஹூமா கூறுகின்றார்: இதன் மூலமாக அல்லாஹ் அருள் செய்தான். கராச்சி லஜ்னா இமாயில்லாஹ் படிப்படியாக முன்னேற்றம் அடையத் துவங்கியது. 1961 –ல் மர்ஹூமா ஈரானிலிருந்து லஜ்னா இமாயில்லாஹ் பணியை ஆரம்பம் செய்தார்கள். பின்னர் பாகிஸ்தானிலும் பணி செய்தார்கள் 1986 –ல் கராச்சி லஜ்னா அமைப்பு, தலைமையக லஜ்னா அமைப்புடன் மீண்டும் இணைக்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்கள் அன்னாரை கராச்சி லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவியாக நியமித்தார்கள். 1986 முதல் 1997 வரை மர்ஹூமா கராச்சி சதர் லஜ்னாவின் கடமைகளை ஆற்றினார்கள்.

கராச்சி லஜ்னா இமாயில்லாஹ் சார்பாக புத்தகங்கள் வெளியிடுவதில் மர்ஹூமாவின் காலகட்டத்தில் நிறைய பணிகள் நடந்தன. 60 புத்தகங்களும் 2 சிறப்பு ஏடுகளும் அன்னார் தலைவியாக இருந்தபோது வெளியாயின. மேலும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பெண்களுக்கான வகுப்புகளும் அன்னாரின் காலகட்டத்தில் நடந்தன.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து கூறினார்கள்: இறையருளால் நீங்கள் மிகச் சிறப்பாக பணி செய்கின்றீர்கள். உள்ளத்திலிருந்து துஆ எழுகின்றது. அல்லாஹ் உங்களது உடல்நலம், வாழ்நாள் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றில் பரக்கத் வழங்குவானாக. உங்களுடைய நல்ல நண்பர்கள் அனைவருக்கும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் சிறந்த நற்கூலியை வழங்குவானாக. அன்னாரைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் உள்ளன. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபா, ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அன்னாரின் பணிகளை மிகவும் பாராட்டினார்கள்.

ஒரு கடிதத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்கள் எழுதினார்கள்: உங்கள் சார்பாக கராச்சி லஜ்னா இமாயில்லாஹ் பற்றிய மகிழ்ச்சிகரமான மற்றும் மிகவும் உளப்பூர்வமான அறிக்கை கிடைத்தது. நான் உங்கள் அனைவரின் உணர்வுகளை உளப்பூர்வமாக மதிக்கின்றேன். எனது இறைவனிடம் உங்கள் அனைவருக்காக எப்போதும் நன்மையை வேண்டி வருகிறேன். எனக்கு மிகவும் விருப்பமான அந்த நினைவுகளைக் கொண்ட அந்த நாட்களை விரைவில் மீண்டும் அல்லாஹ் கொண்டு வருவானாக.

சலீமா மீர் சாஹிபா **36** வயதில் விதவை ஆனதாக அன்னாரின் மகள் கூறுகின்றார். ஆனால் ஒருபோதும் அன்னாரின் நாவிலிருந்து பொறுமையின்மை மற்றும் நன்றி கேடான வார்த்தைகளைச் செவிமடுத்ததில்லை. மர்ஹூமா எப்போதும் எல்லா விவகாரங்களிலும் நன்றி செலுத்தக் கூடியவராகத் திகழ்ந்தார்கள். பிள்ளைகளிடமும் அதே விஷயத்தைக் காண விரும்பினார்கள்.

மர்ஹூமாவின் இன்னொரு மகள் கூறுகின்றார்கள்: எனது கணவர் நோய்வாய்ப்பட்டார். எனது கணவரின் இறுதி நேரமாக இருந்தது. எனது தாயார் சலீமா மீர் சாஹிபா என்னுடன் தங்கியிருந்தார்கள். எனக்கு அவர் கொடுத்த முதல் பொருள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) புத்தகமான மல்ஃபூஸாத் ஆகும். பின்னர், நானும் உனது தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு மல்ஃபூஸாத்துடன் வாழ்க்கையைக் கழித்தேன். அல்லாஹ்விடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டேன். எல்லா நேரத்தையும் விட இறைவன் மீதான நேசமே நம்மிடம் மேலோங்கி இருக்க வேண்டும் என எனக்கு அறிவுறுத்தினார்.

அன்னாரின் மகள் கூறுகின்றார்: எனது கணவரின் இறுதி நேரத்தில் மருத்துவர்கள் கையொப்பமிடுமாறு கூறினார்கள். அப்போது அழுகையை அடக்க முடியாமல் சிறிது சத்தம் கூடி விட்டது. அழுகுரலும் அதிகமானது. எனது தாயாரும் அதனை செவிமடுத்து விட்டார்கள். சலீமா மீர் சாஹிபா அங்குதான் அமர்ந்திருந்தார்கள். நான் மிகவும் வேதனையில் இருந்தேன். (பாருங்கள் மகளின் கணவர் இறக்கப்போகிறார். மகள் மிகவும் வேதனையில் உள்ளார். அப்போது நிகழ்ந்த உரையாடல்)

மகள் கூறுகின்றார்: நான் மருத்துவமனையை விட்டு வெளியேறினேன். நான் எனது தாயாரிடத்தில் தங்கினேன். ஆனால், எனது தாயார் மிகக் கடுமையுடன் கூறினார்கள். நீ எனது மகள் ஆவாய். எனது மகளிடம் பொறுமையின்மை இருக்க முடியாது. இவ்வளவு சத்தமாக உனது அழுகுரல் ஏன் வெளிப்பட்டது? என்று கடிந்து கொண்டார். ஆரம்ப நிலையில் செய்கின்ற பொறுமையே பொறுமையாகும். பின்னர் பொறுமை எல்லாருக்கும் வந்து விடும் என்றும் தனது மகளிடம் கூறினார்கள். அல்லாஹ், தான் கொடுத்த அமானிதத்தை தானே திரும்பப் பெற்றுக் கொண்டான். அவனுக்குரியதை அவன் திரும்பப் பெற்று கொண்டான் என எனக்கு அறிவுரை செய்தார்கள்.

மர்ஹூமாவிற்கு **4** மகள்கள் பிறந்த பிறகு ஒரு மகன் பிறந்தான். ஆனால் சிறிது காலத்தில் இறந்து விட்டான். ஆனால், அல்லாஹ் தனக்குரிய அமானிதத்தை தானே திரும்ப எடுத்துக் கொண்டான் என மிகப் பொறுமையுடனும் தைரியத்துடனும் கூறினார். எப்போதும் துஆ செய்யக் கூடியவர்.

அன்னாரின் பிள்ளைகள் கூறுகின்றார்கள்: எப்போதும் பஞ்சாபி மொழியில், ஒருபோதும் கலீஃபாவின் கரத்தை ஒருபோதும் விட்டு விடாதீர்கள் என்ற பொருள்படும் படி எங்களுக்கு அறிவுரை செய்வார்கள்.

பர்தாவை மிகவும் பேணக்கூடியவர். பர்தாவில் அங்கு குறைவை கண்டாலும் மிக அழகிய முறையில் பிறருக்கு மனவருத்தம் ஏற்படாத வகையில் புரிய வைத்து விடுவார்கள்.

அன்னாரின் மற்றொரு மகள் ஒருவர் கூறுகின்றார்: எனது தங்கைக்கு வரன் பேசப்பட்டது. மணமகன் பெண்ணை நேரில் பார்க்க வேண்டும். அதன் பிறகே முடிவைக் கூறுவேன் எனக் கூறினார். பெண்ணை பர்தாவிற்கு பகரமாக ஸ்கார்ஃப் அணியச் செய்து அனுப்பி விடுவோம் என நாங்கள் தாயாரிடம் கூறினோம். திருமணம் பந்தம் உறுதியானாலும் சரி ஆகாவிட்டாலும் சரி. இவர் பர்தா இன்றி அவர்கள் முன் செல்ல மாட்டார் எனக் கூறி விட்டார். அன்னாரின் ஒரு மகள் வழி பேத்திக்கு இலண்டனில் Driving test நடக்க இருந்தது. அந்த இன்ஸ்பெக்டர் ஆணாக இருந்தார். நான் உன்னை ஆணுடன் தனியாக அனுப்ப மாட்டேன் எனக் கூறி அன்னார் அவருடன் சென்றார்கள். சிலர் கேலியும் செய்தார்கள். ஆனால் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை.

தலையில் ஸ்கார்ஃப் அணிவது தொடர்பாக கலீஃபாக்களின் வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய லஜ்னாக்களின் புத்தகம். அதன் தலைப்பு பெயர் 'முக்காடு அணிபவர்களுக்கு பூ' என்பதாகும். அன்னார் பெண் பிள்ளைகளிடம் கூறினார்கள். தலையில் பூச்சூட விரும்பினால் பர்தா அணிய வேண்டும். தலையை மறைப்பவர்களுக்கு பூ கிடைக்கும்.

அன்னாரின் ஒரு பேத்தி கூறுகிறார்: எனக்கு திருமணம் நடக்கவிருந்தபோது ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களின் புத்தகம் ஒன்றைக் கொடுத்தார்கள். அதில் அன்னார் தனது மகளின் திருமணத்திற்குப் பிறகு வழி அனுப்பி வைப்பதற்கு முன் செய்த அறிவுரைகளைக் கோடிட்டுக் காட்டி எனக்கு அந்த நூலை வழங்கினார்கள். அதனை மீண்டும் மீண்டும் படிக்குமாறு கூறினார்கள்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்: நாங்கள் இரவு நீண்ட நேரம் வரை நிகழ்ச்சியில் கலந்து கொள்வது மர்ஹூமாவிற்கு பிடிக்காது. காலேஜ் பருவத்தில் எங்களது தோழிகளின் இல்லத்தில் ஏதாவது நிகழ்ச்சி நடந்தால் தாயாரும் எங்களுடன் வருவார்கள். இன்றும் கூட பல பெண்கள் இரவை கழித்தல் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்க எனக்கு கடிதம் எழுதுவதுண்டு. அது மிகத் தவறான வழிமுறையாகும். நமது பெண் பிள்ளைகள் அதை தவிர்த்து விட வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் ஃபஜ்ர் தொழுகையை விட்டு விட்டால் நாள் முழுவதும் எங்களுடன் பேச மாட்டார்கள். அதுவே எங்களுக்கான தண்டனையாக இருந்தது. ஒருமுறை அமெரிக்காவில் சிகோகோ நகரத்திற்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தார்கள். ஒரு பெண்மணி இசையுடன் நடனமாட எழுந்தார். அன்னார் பின் புறமாக சென்று அவரை பிடித்து கூறினார்கள். பாடலை நிறுத்துங்கள். நடனமாடும் பெண்களை என்ன கூறுவார்கள்? என உங்களுக்கு தெரியாதா? எனக் கேட்டார்கள். ஒரு கிறித்தவப் பெண்ணை வளர்த்தார்கள். அவர்களுக்கு பல துஆக்களையும் நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அந்த பெண் நான் பாதி அஹ்மதி ஆகி விட்டேன் எனக் கூறினார்.

அமத்துல் பாரி நாசிர் சாஹிபா கூறுகின்றார். அல்லாஹ், சலீமா மீர் சாஹிபாவிற்கு கராச்சி லஜ்னா இமாயில்லாஹ்வில் நீண்ட காலம் பணி செய்யும் பாக்கியம் வழங்கினான். அன்னார் தற்போது உலகில் இல்லை. ஆனால் அன்னாரிடம் தர்பிய்யத் உலகில் இல்லை. ஆனால் அன்னாரிடம் தர்பிய்யத் பெற்ற பெண்கள் உலகின் மூலை முடுக்குகளில் உள்ளனர். லஜ்னா இமாயில்லாஹ்வில் பணி செய்கின்றனர். அன்னார் லஜ்னா அமைப்பிற்கு ஆற்றிய பணிகள் அன்னாரின் பெயரையும் பணியையும் நிலைத்திருக்கச் செய்யும். அன்னார் சிறப்பாக பணியாற்றி வந்தார்கள். நல்ல முறையில் தலைமை தாங்கினார்கள். பிறருக்கு பணி செய்ய கற்றுக் கொடுத்தார்கள். தனது பெயர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமென்ற ஆசை அன்னாருக்கு இருந்ததில்லை. மாறாக தன்னுடன் பணியாற்றுபவர்கள் பணியை கற்றுக் கொள்ள வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

கடைசி காலக்கட்டத்தில் அன்னாருக்கு அடிக்கடி வெளிநாடு செல்ல நேர்ந்தது. ஜமாஅத்தின் பணிகளில் எந்த தேக்கமும் வந்து விடக் கூடாது என்பதற்காக சுயமாக தலைமையகத்திற்கு கடிதம் அனுப்பி வேறொரு நபரை தலைவியாக நியமிக்க ஒப்புதல் பெற்றார்கள். மிக அழகிய முறையில் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்து கூட்டத்தை நடத்தினார்கள். அதில் புதிய தலைவருக்கு மாலை அணிவித்து மதிப்பிற்குரிய பட்டி சாஹிபாவை தலைமைப் பதவியில் அமர்த்தி அன்னாரின் தொண்டுகளை உளமாறக் குறிப்பிட்டு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலும் அவருக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி அறிவுரையும் செய்தார்கள். அவ்வாறு மிகக் கண்ணியத்துடன் அழகிய முறையில் பொறுப்பிலிருந்து விலகினார்கள். இப்படித்தான் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று அன்னார் குறிப்பிடுகின்றார்கள்.

ஜமாஅத்தின் பொறுப்பிலிருந்து சிலரை நீக்கும்போது அல்லது சிலருக்கு ஒப்புதல் வழங்காதபோது அவர்கள் ஆட்சேபனை செய்யத் துவங்கி விடுகின்றனர். அத்தகைய நபர்களுக்கு இதில் படிப்பினை உள்ளது. பொறுப்பு கிடைத்தால் அல்ஹம்துலில்லாஹ். இல்லையென்றாலும் அல்லாஹ்விற்கு நன்றி கூற வேண்டும். வேறு வழிகளில் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற முயற்சி செய்ய வேண்டும். பதவி கிடைத்தால்தான் பணி செய்ய முடியும் என்பது அவசியமில்லை.

அடுத்து ஒருவர் கூறுகின்றார்: அன்னார் எல்லா விவகாரங்களையும் மதிநுட்பத்துடனும் இரகசியமாகவும் அணுகுவார். அவரிடமிருந்து விவகாரம் வெளியில் கசிந்து விடும் என்ற எந்த அச்சமும் எவருக்கும் இருந்ததில்லை. இரகசியத்தை மிகவும் பேணி வந்தார்.

அமத்துல் பாரி நாஸிர் சாஹிபா எழுதுகிறார்: அனைத்து இரகசியங்களையும் எவ்வாறு தமது நெஞ்சில் புதைத்து வைத்திருந்தார்? என்பது தெரியவில்லை. இது மாபெரும் சிறப்பாகும். ஆனால் ஆண்களிடமும் கூட தற்போது இவ்விஷயத்தில் குறைபாடு உள்ளது.

அமத்துன் நூர் சாஹிபா சத்ர் லஜ்னா கராச்சி எழுதுகின்றார்: மர்ஹூமா எல்லாரிடமும் அன்பு காட்டக் கூடியவர். எளிமையானவர். தன்னலமற்றவர். தன்னை பின்னிலைப்படுத்தி பிறரை பாராட்டும் மனம் படைத்தவர். அல்லாஹ் அன்னாருக்கு ஓர் அழகிய முகத்தை வழங்கியதோடு மட்டுமல்லாமல் அழகிய மற்றும் மிருதுவான உள்ளத்தையும் அன்னாருக்கு வழங்கி இருந்தான்.

நான் தலைவியாக்கப்பட்டபோது Area பெரிதாக உள்ளது. எனக்கு முன் அனுபவமும் இல்லை. வண்டியும் என்னிடத்தில் இல்லை. எனக் கூறினேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: கவலை வேண்டாம். எனது மகள் உனக்கு அருகிலேயே உள்ளார். சுற்றுப்பணத்திற்கான நேரத்தில் தேவைப்படும்போது எனது மகளிடம் கூறினால் காருக்கான ஏற்பாட்டை செய்து விடுவார். அல்லது என்னிடம் கூறுங்கள் நான் எனது காரை அனுப்பி வைக்கிறேன். எந்த கவலையும் வேண்டாம். அதற்கான எந்த தேவையுமில்லை எனக் கூறினார்கள். மிக அதிகமான பணிவு அன்னாரிடம் இருந்தது. ஊழியர்களுடன் அமர்ந்து பணி செய்து வந்தார்கள்.

கராச்சியின் இஷாத் செயலர் எழுதுகின்றார்: சலீமா மீர் சாஹிபா அவர்களுடன் **1986** முதல் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் எப்போதும் அன்னாரை ஏழைகளை அதிகமாக பராமரிக்கக் கூடியவராகவும் பொறுமை மிக்கவராகவும் கண்டேன். ஒருமுறை கராச்சியின் ஒரு நல்ல தொண்டாற்றக்கூடிய பெண்மணி ஏதோ காரணத்தால் ஜமாஅத்தை விட்டு விலகினார். அவர் மிகவும் நோய்வாய்ப்பட்ட தகவல் அன்னாருக்கு கிடைத்தது. மேலும் அந்த பெண்ணிடம் ஜமாஅத்தின் சில முக்கியம் வாய்ந்த பொருள்கள் இருந்தன. ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹ்) அவர்களின் துஆ மற்றும் வழிகாட்டுதலுடன் மர்ஹூமாவின் தலைமையில் அந்த பெண்ணிடம் மிக மதிநுட்பத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது. ஆனால், அந்த அரிய பொருட்களைப் பெரும் முன்னரே அந்த பெண்மணி இறந்து போனார்.

அந்தப் பெண்ணின் உறவினரிடம் அன்னார் கூறினார்கள்: ஜமாஅத்தின் பொருடகள் அவரிடம் ஏதுமிருந்தால் கொடுத்து விடுங்கள். அதற்கு விலை கொடுக்கவும் நாங்கள் தயாராக உள்ளோம் எனக் கூறினார்கள். ஜமாஅத்தின் சில வரலாறும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில அருள்களுக்குரிய பொருட்களும் அவரிடம் இருந்தன. எங்களுக்கு ஒரு பெட்டி கிடைத்தது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கையொப்பம் இடப்பட்ட கடிதமும் இருந்தன. ஆனால் மிக மதிநுட்பத்துடன் அன்னார் அஹ்மதியாக இருந்து பின்னர் வெளியேறிய அந்த பெண்மணியுடன் நடந்து பொருட்களை மீட்டெடுத்தார்கள்.

அன்னார் மிக கண்ணியத்துடன் நடப்பவர். மிக தைரியசாலி, பொறுமைமிக்கவர், நல்லொழுக்கமிக்கவர், கிலாஃபத்துடன் தொடர்புடன் இருக்க அறிவுரை செய்பவர், நன்மையில் நிலை நின்றவர், பிறருக்கு நன்மையை போதித்தவர், நம்மவர்களுக்கும் அன்னியர்களுக்கும் ஒரே மாதிரி அறிவுரை செய்வார்கள். தமது பிள்ளைகளை கண்டும் காணாமல் விட்டு விடாமல் தமது மகள்களுக்கும் அறிவுரை வழங்குவார்கள். அல்லாஹ்வின் மீது அதிகமான நம்பிக்கை இருந்தது. இறை திருப்தியில் எப்போதும் திருப்தி கொண்டவராக இருந்தார் என்று பலரும் கடிதத்தில் மர்ஹூமாவைப் பற்றி எழுதியுள்ளனர்.

அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரது மகள்களுக்கு அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன்.

★ ★ ★ ★ ★

(12-வது பக்கத்தின் தொடர்ச்சி...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: எல்லா பழக்கங்களை விடவும் கருணை, அனுதாபத்துடன் நடந்து கொள்வது, குற்றங்களை திரையிட்டு மறைப்பது ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பிறரது குறைகளை பார்க்கும் போது அதை பகிரங்கப்படுத்தக் கூடாது. ஒரு தீமை ஜமாஅத் அளவில் பரவி விட்டால் மேலும் அந்த தீமையானது ஜமாஅத் தீமையாக ஆகும் அளவிற்கு வந்து விட்டால் பிறகு அதனுடன் தொடர்புள்ள பொறுப்பாளரிடம் அது பற்றி எடுத்துக் கூற வேண்டும். அது அல்லாமல் அந்த தீமையை எல்லா இடங்களிலும் பரப்பக் கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : உள்ளம் உடைவதற்கும், துக்கம் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கின்ற அளவில் சிறு சிறு விஷயங்களுக்காக கடுமையான மற்றவர்களை பிடிக்கக் கூடாது. ஒருவர் மற்றவருடன் அனுதாபத்துடன் நடந்து கொண்டு சிலரது குறைகளை திரையிட்டு மறைப்பதன் மூலமாகவே ஜமாஅத் உருவாகின்றது. இத்தகைய நிலை உருவாகி விட்டால் நாம் ஒரே இருப்பு போன்று ஆகி விடுவோம். நம்மில் ஒருவர் மற்றவரது உடல் உறுப்புகளைப் போன்று ஆகிவிடுவோம். நம்மில் ஒருவர் மற்றவரை உண்மையான சகோதரரை விட ஒரு படி மேலாகவே கருத ஆரம்பித்து விடுவார். இறைவன் சஹாபாக்களுக்கும் கூட இந்த அருள் மற்றும் சகோதரத்துவத்தின் வழிமுறையையே நினைவூட்டி இருக்கின்றான். அவர்கள் தங்க மலையை செலவு செய்தாலும் கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அவர்களுக்கு கிடைக்கின்ற அந்த சகோதரத்துவம் ஒருபோதும் அவர்களுக்கு கிடைத்திருக்காது. இவ்வாறே இறைவன் இந்த இயக்கத்தையும் நிறுவியுள்ளான். இவ்வகையிலான சகோதரத்துவத்தையே அவன் இங்கு நிலைநாட்டுவான். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 347-349. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே நாம் எல்லா மட்டத்திலும் அன்பு, நேசம், சகோதரத்துவம், உரிமைகளை செலுத்துவது ஆகியவற்றை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உண்மையில் இவை தான் பெருநாளின் உண்மையான மகிழ்ச்சிகளை பெறுபவர்களாக நம்மை ஆக்குகின்றது. அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் அல்லாஹ்விற்கு உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக ஆவோமாக. அவனது இறைவணக்கத்திற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக இருப்போமாக. அவனது அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துபவர் –களாக இருப்போமாக.

இரண்டாவது குத்பாவிற்குப் பிறகு நாம் துஆ செய்வோம். துஆவில் உண்மையான முறையில் இறைவணக்கம் செய்பவர்களாக நாம் ஆகுவதற்கு துஆ செய்யுங்கள். உண்மையான முறையில் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்தக்கூடிய நம்பிக்கை கொண்டவராக நாம் ஆகுவதற்கு துஆ செய்யுங்கள். அத்துடன் சில இடங்களில் ஜமாஅத் சகோதரர்கள் மீது சில பிரச்சனைகள் வந்துள்ளன. அல்லாஹ் அவற்றை அகற்றுவதற்காக துஆ செய்யுங்கள். ஜமாஅத் ரீதியாக சிலர் கவலைகளில் மூழ்கி இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களின் கவலைகளை அகற்றுவானாக. எவர்கள் வழக்குகளில் சிக்கிக் கொண்டு இருக்கின்றனரோ அவர்களுக்கு அதனால் ஏற்படும் கவலைகளை அல்லாஹ் அகற்றுவானாக. வழக்குகளிலிருந்து குற்றமற்றவர்களாக அவர்களை விடுவிப்பானாக.

குறிப்பாக பாகிஸ்தானில் இறைவழியில் கைது செய்யப்பட்ட சிலர் உள்ளனர். இத்தகையவர்கள் அல்ஜீரியாவிலும் உள்ளனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். விரைவாக அவர்கள் விடுதலை பெறுவதற்கான வழிவகைகளை அல்லாஹ் உருவாக்குவானாக. எந்த வகையில் ஒருவர் துக்கத்தில் இருந்தாலும் அல்லாஹ் அவர்களது துக்கத்தை அகற்றுவானாக.

இரண்டாவது குத்பாவிற்குப் பிறகு கூட்டு துஆ செய்த பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ். எல்லாருக்கும் ஈது முபாரக். M.T.A –வின் மூலமாக முழு உலகிற்கும் ஈத் முபாரத்தை தெரிவிக்கின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் பெருநாளின் உண்மையான மகிழ்ச்சிகளை வழங்குவானாக. அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்.

★ ★ ★ ★ ★

*(2-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி இருப்பதே இதற்கான காரணமாகும். எனவே தமது மகிழ்ச்சியை தமது நண்பர்ளோடு சேர்ந்து ஒருவர் கொண்டாடுகின்றார். ஆறு தொழுகைகளை நாம் தொழுகின்ற போது நாம் சூரா ஃபாத்திஹாவையும் அதிகமாக ஓதுகின்றோம். ஒவ்வொரு தொழுகை –யிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரா ஃபாத்திஹா ஓதப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று நாம் கூறும்போது அல்லாஹ்வை நாம் நன்றி செலுத்துகின்றோம். இது அல்லாஹ் புகழ்வதாகும். மேலும் அவனது தூய்மையை எடுத்துக் கூறுவதாகும். பொதுவான நாட்களிலும் ஃபர்ளான தொழுகைகளிலும் சுன்னத்துகளிலும் நாம் 32 முறை சூரா ஃபாத்திஹாவை ஓதுகின்றோம். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று கூறுகின்றோம்.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றோம். பெருநாள் அன்று 34 முறை அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று கூறி அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றோம். நஃபிலான தொழுகைகளை தொழுபவர்கள் இதை விட அதிகமாக ஓதுவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்ஹம்து லில்லாஹ் என்ற சொற்களில் முஸ்லிம்களுக்கு இந்த போதனை தரப்பட்டிருக்கின்றது. வணக்கத்திற்குரியவன் யார்? என்று அவர்களிடம் கேட்கப்படும்போது எல்லா புகழுக்கும் உரியவன் யாரோ, எல்லா சிறப்புகளும் வல்லமையும் எவனிடம் இருக்கின்றனவோ அவனே வணக்கத்திற் –குரியவன் ஆவான். அந்த புகழும் சிறப்பும் இருப்பது அவனிடம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்று பதில் கூற வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாக இருக்கின்றது. (த.ஃப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொகுதி 1 பக்கம் 82 அடிக்குறிப்பு)

அதாவது எல்லா வகையான சிறப்புகளும் வல்லமையும் அல்லாஹ்விடம் இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அவனிடமே அவை இருக்கின்றன. இதனையே மேலும் விளக்கியவாறு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒவ்வொரு புகழும் துதியும் அல்லாஹ்விற்கே உரியதாகும். எனவேதான் நாம் அல்ஹம்து லில்லாஹ் என்பதிலிருந்து ஆரம்பிக்கின்றோம். இறைவனை வணங்கும் போது அதில் ஆன்மாவின் எழுச்சியும் இயல்பு அதன் பக்கம் ஈர்க்கப்படுவதும் இருக்க வேண்டும் என்பதே அதன் அசல் குறிக்கோளாக இருக்கின்றது. வெளிப்படையாக இறைவணக்கம் செய்வது மட்டும் போதாது. தலையிலிருந்து சுமையை இறக்கி வைப்பது போன்று இருக்கக்கூடாது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: அந்த ஈர்ப்பானது பேரன்பினால் நிறைந்திருக்க வேண்டும். வேறு எவருக்காகவும் அத்தகைய ஈர்ப்பு உருவாக முடியாது. அதாவது ஒரு நபர் எல்லா விதமான சிறப்புகளின் தொகுப்பாக இருக்கின்றார் என்பதை பார்க்கின்ற போது தான் தன்னையும் அறியாமல் மனிதன் அவனை புகழ்கின்றான். இந்த நிலை வேறு எவரிடமும் இருக்க முடியாது. மனிதன் சிந்தித்துப் பார்க்கும் போது அல்லாஹ் மட்டுமே உண்மையான புகழுக்குரியவன் என்பது தெரிய வருகிறது. ஏனென்றால் அவனே எல்லா சிறப்புகளின் தொகுப்பாக இருக்கின்றான்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: முழுமையான புகழ் இருவகையான சிறப்புகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. ஒன்று, அழகு முழுமையாக இருப்பதாகும். இன்னொன்று அருள் முழுமையாக இருப்பதாகும். இந்த இரு விஷயங்களும் எவரிடத்தில் இருக்குமோ அவரை நாம் புகழ்ந்து கூற முடியும். அவரிடம் அழகும் இருக்க வேண்டும். அருளும் இருக்க வேண்டும். அப்போது தான் மனிதன் அவனைப் புகழ முடியும். அவனுக்கு நன்றி செலுத்த முடியும்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த இரண்டு சிறப்புகளும் எவரிடம் ஒன்று சேர்ந்திருக்கிறதோ அவருக்காக உள்ளம் அர்ப்பணமாகி விடுகின்றது. இந்த இரு விதமான சிறப்புகளையும் அல்லாஹ்விடம் இருப்பதை வெளிப்படுத்திக் காட்டுவதே திருக்குர்ஆனின் மிகப் பெரிய குறிக்கோளாகும். அதன் மூலமாக ஈடிணையற்ற இறைவனின் பக்கம் மக்கள் ஈர்க்கப்படுகின்றனர்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ்விடம் இருக்கின்ற இந்த சிறப்புகளை அதாவது அவனது அழகையும் அருளையும் மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதையே திருக்குர்ஆன் விரும்புகின்றது. அதன் மூலம் மக்கள் ஒரு குறிப்பான ஈர்ப்புடனும் எழுச்சியுடனும், அன்புடனும் அல்லாஹ்வின் பக்கம் வர வேண்டும். ஆன்மாவின் எழுச்சி மற்றும் ஈர்ப்பு ஆகியவற்றுடன் அவனது அடியானாக இருக்க வேண்டும். (அய்யாமே சுல்ஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 247)

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் எல்லா நற்பண்புகளின் தொகுப்பாக இருக்கின்றான். எனவே எல்லா வகையான சிறப்பும் அவனிடம் காணப்படுகின்றது. இதன் மூலம் அவனுடைய அழகு வெளிப்படுகின்றது. எல்லா நற்பண்புகளும் அவனிடம் ஒன்று திரண்டிருக்கின்றன. இதனை அவன் பிறருக்கு கூறினாலும் கூறாமல் இருந்தாலும் சரியே. ஏனென்றால் அவனது நற்பண்புகள் ஒன்று சேரும் போது அவனது அழகு வெளிப்படுகின்றது. அருளைப் பொருத்தவரையில் அல்லாஹ்வின் அருள்தான் எல்லாவற்றிற்கும் அதிகமாக மனிதனுக்கு பலன் தரக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் இறைவனின் எல்லா படைப்பினங்களின் மூலமாகவும் மனிதன் பலன் பெறுகின்றான். (அய்யாமே சுல்ஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 247 - 248)

மனிதன் மீது அல்லாஹ்வின் பல அருள்கள் இருக்கின்றன. அல்லாஹ் படைத்த அனைத்து படைப்பினங்களும் மனிதனின் பயனுக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. எப்போது விரும்பினாலும் மனிதன் அதிலிருந்து பயன் பெறலாம். அவனது நற்பண்புகள் அழகின் வடிவில் வெளிப்பட்டிருப்பதால் நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவனது அருள்கள் உலகிலுள்ள பயன் தரக்கூடிய எல்லா பொருள்களின் வடிவில் வெளிப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து மனிதனே பயன் பெறுகின்றான். எல்லாரையும் அதிகமாக அவனுக்கு அவற்றிலிருந்து பயன் கிடைக்கிறது.

எனவே அவனுடைய அடியானாக இருப்பதற் –குரிய உரிமையை உள்ளத்து மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவது நம் மீது கடமையாக இருக்கின்றது. அவனுடைய உண்மையான அடியாராக வேண்டும் என்பதை அது எதிர்பார்க்கின்றது. மேலும் அவனது கட்டளைக்கேற்ப செயல்படுபவர் –களாக நாம் இருக்க வேண்டும். முஸ்லிம் என்ற நிலையில் அல்லாஹ்வை புகழ்வது அவனுக்கு நன்றி செலுத்துவது ஆகியவை மிகவும் அதிகமாக அவன் மீது கடமையாக இருக்கின்றது. அல்லாஹ்விற் –குரிய உரிமையை செலுத்துவதுடன் முஸ்லிம் என்ற நிலையில் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துபவர்களாக ஆகுவதும் நமது கடமையாக இருக்கின்றது. அல்லாஹ் தனது அழகையும் அருளையும் தனது அடியார்களிடம் வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.

எனவே அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக அவனது படைப்பினங்களுடன் நமது நிலைமைக்கேற்ப நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. இதை நாம் செய்தால்தான் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்பதன் சரியான அறிவைப் பெறுபவர்களாக நாம் இருப்போம். அதை நமது நிலைமைகளில் வெளிப்படுத்துக் கூடியவர்களாக நாம் இருப்போம். தமது சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்களாகவும் அமைதி, நேசம், அன்பு ஆகியவற்றின் தூதுச் செய்தியை பரப்புபவர்களாகவும் சமுதாயத்தில் ஒருவர் மற்றவருக்குரிய உரிமையை செலுத்தக் கூடியவர்களாகவும் நாம் இருப்போம். அதன் மூலம் உண்மையான பெருநாளின் மகிழ்ச்சியை கொண்டாடுபவர்களாக நாம் இருப்போம்.

எனவே இதன் பக்கம் நாம் அதிகமாக மகிழ்ச்சியான தருணங்களில் முயற்சி செய்ய வேண்டும். நமது சொந்த மகிழ்ச்சிகளை மட்டும் கொண்டாடாமல் நமது சுற்றுச்சூழலில் இருப்பவர்களுக்கும் ஒவ்வொரு மட்டத்திலுள்ளவர் –களுக்கும் மகிழ்ச்சியை வழங்கக் கூடியவர்களாக –வும் நாம் இருக்க வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல மேற்கோள்கள் இருக்கின்றன. நாம் நமது ஆற்றல்களுக்கேற்ப எவ்வாறு அழகு மற்றும் அருளின் உயர்ந்த படித்தரத்தை பெற முடியும் என்பதை அன்னார் விளக்கிக் கூறியுள்ளார்கள். நமது ஆற்றல்களுக்கு ஏற்ப நாம் செயலாற்ற வேண்டும். அப்போது தான் பெருநாளின் உண்மையான மகிழ்ச்சியை நாம் பெற முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவனுடன் தூய தொடர்புகளை நிலைநாட்டுவதும், அவன் மீதுள்ள தனிப்பட்ட அன்பானது இரத்த நாளங்களில் ஊடுருவி விடுவதும் தான் நன்மையாகும். இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ (அந்நஹ்ல் : 91) இறைவனோடு நீதியுடன் நடந்து கொள்வது என்பது அவனது அருள்களை நினைவு கூர்ந்து அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாகும். அதாவது அல்லாஹ் எண்ணற்ற அருள்களை நமக்கு வழங்கி

இருக்கின்றான். அவற்றை நினைவு கூர்ந்து அதற்கு நன்றி தெரிவிப்பதுடன் அவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். மேலும் அவனுக்கு இணையாக எதையும் வைக்கக் கூடாது. மேலும் அவனை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். மேலும் அதில் முன்னேற வேண்டும். அவ்வாறு முன்னேறும்போது இரண்டாவது படித்தரமாக இஹ்ஸான் இருக்கின்றது. இஹ்ஸான் என்பது மனிதன் இறைவனை பார்த்துக் கொண்டிருப்பது போன்று அவனது இருப்பின் மீது நம்பிக்கை கொள்வதாகும். மேலும் உங்களுக்கு நன்மை செய்யாதவர்களுக்கும் நன்மை செய்வதாகும்.

இதையும் கடந்து அடுத்த படித்தரத்தை அடைவதாக இருந்தால் அது இயல்பாகவே இறைவன் மீது அன்பு கொள்கின்ற படித்தரமாகும். அது நன்மையின் அடுத்த படித்தரமாக இருக்கின்றது. சொர்க்கத்தின் மீது ஆசை வைத்தவாறோ, நரகத்தின் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவோ அந்த அன்பு இருக்காது. அது உறவினர்களோடு நடந்து கொள்வது போன்று இருக்கும். அதாவது இயல்பாகவே இறைவன் மீது அன்பு உருவாகி விடும். ஏனென்றால், அவனது எண்ணற்ற நற்பண்புகள் இருக்கின்றன. மேலும் அவனது அருள்களும் இருக்கின்றன. அவன் மீது அன்பு கொள்வதன் காரணமாக நமக்கு சொர்க்கம் கிடைக்கும் என்பதற்காகவோ, அன்பு கொள்ளாமல் இருந்தால் நரகத்திற்கு சென்று விடுவோம் என்ற அச்சம் இல்லாமலும் இயல்பாகவே அவன் மீது அன்பு இருக்க வேண்டும். இதுவே அல்லாஹ்வுடனுள்ள ஈதாயிதுல் குர்பா அதாவது உறவினர்களோடு நடந்து கொள்வது போன்று நடந்து கொள்ளுதல் என்ற அந்தஸ்தாகும்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சொர்க்கம் நரகம் ஆகியவை இல்லையென்று வைத்துக் கொண்டாலும் கூட இறைவன் மீதுள்ள அன்பின் எழுச்சி மற்றும் அவனுக்கு கட்டுப்படுவதில் எந்த வித்தியாசமும் ஏற்பட்டு விடக்கூடாது. இறைவனோடு இத்தகைய அன்பு ஏற்படும் போது அதிலிருந்து ஓர் ஈர்ப்பு உருவாகி விடுகின்றது. அத்தகைய தொடர்பில் எந்த மாசும் இருக்காது.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவனது படைப்பினங்களிடமும் அவர்களின் உண்மையான உறவினர்களைப் போன்று நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இந்த தகுதி எல்லா–வற்றையும் விட மேலானதாகும். ஏனென்றால் இஹ்ஸான் என்பதில் பிறருக்கு காட்டுகின்ற ஒரு தன்மை இருக்கின்றது. ஒருவர் நன்றிகேடு காட்டும் போது அவன் மீது அருள் செய்தவர் நான் இவ்வாறெல்லாம் உன் மீது அருள் செய்தேன் என்று கூறி விடுகின்றார். ஆனால் இயல்பாக இருக்கின்ற அன்பில் எந்த விதமான காட்டுதலும் இருக்காது. ஒரு தாய்க்கு தனது குழந்தை மீதுள்ள அன்பு போன்று அது இருக்கும். ஓர் அரசர் நீ உனது குழந்தையை கொன்று விட்டாலும் கூட உன் மீது எந்த விசாரணையும் இருக்காது என்று கூறினாலும் கூட ஒரு தாய் அதைக் கேட்பதைக் கூட சகித்துக் கொள்ள மாட்டாள். அந்த அரசரை அவள் ஏசுவாள்.

ஆனால் இந்த குழந்தை இளைஞராக ஆகுவதற்கு முன்னதாக நான் மரணித்து விடுவேன் என்பதை அந்த தாய் அறிந்திருக்–கின்றாள். என்றாலும் கூட அந்த குழந்தையின் மீதுள்ள சொந்த அன்பின் காரணமக அக்குழந்தையை வளர்ப்பதை அவள் விட்டுவிடுவதில்லை. பெரும்பாலும் பார்க்கின்ற போது தாய் தந்தையர் முதியவர்களாக இருக்கின்றனர். அவர்களது சந்ததிகளிடமிருந்து அவர்கள் பலன் பெறுவதற்கான எந்த நம்பிக்கையும் வைப்பதில்லை. அவ்வாறிருந்தும் கூட அந்த பெற்றோர்கள் அக்குழந்தையின் மீது அன்பு கொள்கின்றனர். அவர்களை வளர்க்கின்றனர். இது இயல்பிலுள்ள ஒரு விஷயமாகும்.

இந்த தகுதியை அடைகின்ற அன்பைப் பற்றியே ஈதாயிதுல் குர்பா என்று கூறப்பட்டிருப்பதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய அன்பையே நாம் இறைவன் மீது வைக்க வேண்டும். அது அல்லாமல் தகுதிகளைப் பெற வேண்டும் என்ற விருப்பமோ, இழிவைப் பற்றிய அச்சமோ இருக்கக் கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி பக்கம் 181 - 182. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த மேற்கோளில் ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் நுட்பமாக இந்த இரு வகையான உரிமைகளையும் செலுத்துவதில் அதன் உச்சகட்ட படித்தரத்தை அடைவதன் பக்கம் கவனமூட்டி–யுள்ளார்கள். அல்லாஹ்விற்குரிய உரிமை மற்றும் அவன் மீது கொள்கின்ற அன்பு ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். மேலும் அல்ஹம்துலில்லாஹ் தொடர்பான உண்மையான அறிவு இருக்க வேண்டும். மேலும் அல்லாஹ் தனக்கு நன்றி செலுத்துவதற்கான வழிமுறையையும் எடுத்துக் கூறி விட்டான். அல்லாஹ்வின் அடியார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, நல்லுறவை பேணுவது, அதில் உயர்ந்த படித்தரத்தை அடைவது ஆகியவையே உலகின் உண்மையான மகிழ்ச்சிகள் மற்றும் அமைதிக்கான உத்திரவாதமாக ஆக முடியும்.

பிறகு படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அல்லாஹ்வுடனுள்ள தொடர்பு பற்றி மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவன் உங்களிடம் என்ன வேண்டுகின்றான்? நீங்கள் மனித இனத்துடன் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும். பிறகு அதையும் கடந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். உங்களுக்கு நன்மை செய்யாதவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். பிறகு அதையும் தாண்டி உண்மையான உறவினர்–களுடன் நடந்து கொள்வது போன்று இறைவனின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். தன்னுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளாதவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதே ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரின் சிறப்பாகும்.

ஒருவர் நமக்கு நன்மை செய்தால் அவருடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளத்தான் செய்வீர்கள். ஆனால் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாதவருக்கும் நன்மை செய்வதே உண்மையான நன்மையாகும் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்–கள்: உண்மையான உறவினர்களோடு நடந்து கொள்வது போன்று நீங்கள் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அதாவது உங்களுக்கு நன்மை செய்யாதவர்களுடன் நீங்கள் நீதியுடன் நடந்து கொண்டால் மட்டும் போதாது. மாறாக, அவர்கள் மீது அருள் செய்யவும் வேண்டும். பிறகு அந்த நிலையையும் கடந்து தாய்மார்கள் தமது குழந்தைகளுடன் நடந்து கொள்வது போன்று நீங்களும் நடந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் மனிதனிடத்தில் பிறருக்கு காட்டுகின்ற தன்மை மறைவாக இருக்கின்றது. ஒருவர் மீது அருள் செய்பவர் தமது பேருதவியை வெளிப்படுத்திக் காட்டியும் விடுகின்றார். ஆனால் எவர் தாயைப் போன்று இயல்பான உணர்வுடன் நன்மை செய்கின்றாரோ அவர் ஒருபோதும் சுயமே பிறருக்கு காட்டுவதற்காக எதையும் செய்வதில்லை.

இந்த இயல்பான உணர்வே அதாவது தாயைப் போன்று இருப்பதே நன்மைகளின் இறுதி தகுதியாகும். மேலும் இது படைப்பினங்கள் தொடர்பான வசனங்கள் மட்டுமல்ல. மாறாக, இறைவனுடன் தொடர்புள்ள வசனமும் ஆகும். இறைவனுடன் நீதியுடன் நடந்து கொள்வது என்பது அவனது அருள்களை நினைவு கூர்ந்து அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாகும். இறைவனுடன் அருள் செய்தவாறு நடந்து கொள்வது என்பது அவனை பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று அவன் மீது உறுதி கொள்வதாகும். மேலும் இறைவனுடன் நெருங்கிய உறவினர்களோடு நடந்து கொள்வது போன்று நடந்து கொள்வது என்பது சொர்க்கத்தின் மீதுள்ள ஆசையினாலோ அல்லது நரகத்தின் மீதுள்ள அச்சத்தினாலோ அவனை வணங்காமல் அந்த சொர்க்கம் நரகம் இல்லை என்று வைத்துக் கொண்டாலும் கூட அந்நிலையிலும் அன்பின் எழுச்சியிலும் கட்டுப்படுதலிலும் எந்த வித்தியாசமும் வராமல் இருப்பதாகும். (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 30,31)

சிறு சிறு விஷயங்களுக்காக மக்கள் அல்லாஹ் துஆவை கேட்கவில்லை என்று கூறுகின்றனர். இந்த பிரச்சனை வந்து விட்டது. அல்லது இந்த துன்பம் ஏற்பட்டு விட்டது என்பதனால் அல்லாஹ்விற்கு எதிராக முறையீடுகளை கூறுவது ஆரம்பித்து விடுகின்றது. அவனது அருள்களை அவர்கள் நினைவு கூர்வதில்லை. எனவே அவனது அருள்களை நினைவு கூருங்கள். ஓர் இயல்பான உணர்வுடன் அவன் மீது அன்பு கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த தரத்தையே நாம் பெற வேண்டி இருக்கின்றது. அப்போதுதான் உண்மையான மகிழ்ச்சியை நாம் பெற முடியும். நம்மீது அல்லாஹ்வின் எண்ணற்ற அருள்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் அந்த எண்ணற்ற அருள்களிலிருந்து பங்கு பெறுபவர்களாக நாம் இருக்கின்றோம். அவற்றை நினைவு கூர்ந்து அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடப்பது ஒருபுறம் இருக்கட்டும். அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி அவனுக்கு நன்றி தெரிவிக்காமல் பலரும் இருக்கின்றனர்.

அல்ஹம்துலில்லாஹ் என்று கூட அவர்கள் கூறுவதில்லை. அவனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எந்த சொல்லையும் அவர்கள் கூறுவதில்லை.

அல்லாஹ் நம்மிடம் என்ன விரும்புகின்றான்? என்பதை மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் அவர்கள் முற்றிலுமாக மறந்து விடுகின்றனர். பிறகு மனிதன் அல்லாஹ்வின் மீது எவ்வாறு அருள் செய்ய முடியும் ? என்பதைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தர்பிய்யத் வழங்குகின்றார்கள் :

அதாவது அல்லாஹ்வுடன் நன்மையான தொடர்வை வைப்பது என்பது அவனது பேருள்களை நினைவு கூறியவாறு அவனுடன் தொடர்பு கொள்வதில் எந்த அளவு நாம் முன்னேற வேண்டுமென்றால் இறைவனை பார்ப்பது போன்று அது இருக்க வேண்டும். ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரின் அடையாளம் இதுவேயாகும். இத்தகைய நிலைமையை நம்மிடம் உருவாக்குவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. எவ்வித சுய நோக்கமும் இல்லாமல் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாக மட்டும் அவனை வணங்குபர்களாக நாம் இருப்போமாக. அவனது அழகையும் அருளையும் கண்முன் நிறுத்தியவாறு அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக மட்டும் அவற்றை நாம் கருத்தில் கொள்வோமாக.

பிறகு இது தொடர்பாக மேலும் விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவனுடனும் அவனது படைப்புகளுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இறைவன் உங்களுக்கு கட்டளையிடுகின்றான். அதாவது அல்லாஹ்விற்குரிய உரிமையையும் அடியார்களுக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும். இந்த நிலையையும் கடந்து நீதியுடன் நடந்து கொள்வது மட்டுமல்லாமல் பிறருக்கு அருள்பாலிப்பவர்களாகவும் நீங்கள் இருக்க வேண்டும். அதாவது கடமையானவற்றை விடவும் அதிகமான நன்மைகளை செய்ய வேண்டும். எந்த அளவு கலப்பற்ற தன்மையுடன் இறைவனின் அடியானாக ஆகிவிட வேண்டுமென்றால், நீங்கள் அவனை பார்ப்பது போன்று இருக்க வேண்டும். இறை வணக்கங்களில் அல்லாஹ் கடமையாக்கியவை உள்ளன. ஐவேளை தொழுகைகள் இருக்கின்றன. பெருநாளும் கடமையாக இருக்கின்றது. ஜுமுஆவும் கடமையாக இருக்கின்றது.

இஹ்ஸான் அதாவது அவனை வணக்கத்திற்கான உரிமையை செலுத்துவது என்பது நஃபிலான விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவதாகும். இறைவனை நினைவு கூர்வதன் பக்கம் மனிதனின் கவனம் இருக்க வேண்டும். ஒருவருக்கு செலுத்த வேண்டிய உரிமைக்கும் அதிகமான முறையில் அவருக்கு நன்மை செய்வதிலும், அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதிலும் ஈடுபட வேண்டும். அதாவது எந்த அளவு ஒருவருக்கு உரிமை இருக்கின்றதோ அதை விட அதிகமாக அவருடன் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும். அதையும் கடந்து முன்னேறும் போது நெருங்கிய உறவினர்களோடு ஒருவர் நடந்து கொள்வது போன்று எவ்வித சுய நோக்கமும் இல்லாமல் இறைவனை வணங்குவதிலும் அவனது படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதிலும் ஈடுபட வேண்டும். (ஷய்னயே ஹக், ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 361,362)

பிறகு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது தொடர்பாக திருக்குர்ஆன் கூறும் போதனையை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உங்களது சகோதரர்களிடமும், மனித இனத்திடமும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். ஒருவருக்கு செலுத்த வேண்டிய உரிமைக்கு அதிகமாக அவருக்குரிய உரிமையை செலுத்துவதில் தயக்கம் காட்ட வேண்டாம். நீதியில் நிலைத்திருங்கள். அதாவது எவ்வகையிலும் அவர்கள் மீது அநீதி இழைக்கக்கூடாது. உங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கின்றதோ அதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அதைவிட அதிகமாக அவர்கள் மீது அநீதி இழைத்தவாறு உங்களது உரிமையை பெறுவதற்காக அவர்களுக்குரிய உரிமையை அழித்து விடாதீர்கள். ஏனென்றால் இவ்வாறு நீதியின் எதிர்பார்ப்பை அவரால் நிறைவேற்ற முடியாது. எனவே நீதியில் நிலைத்திருக்க வேண்டும். உங்களுக்குரிய உரிமையை விட அதிகமாக எந்த பொருளின் மீதும் நீங்கள் விருப்பம் கொள்ளாதீர்கள். சிலர் வழக்குகளின் போது தங்களுக்குரிய உரிமைகளை விட்டும் வெளியேறி சென்று விடுகின்றனர்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த படித்தரத்தையும் கடந்து நீங்கள் முன்னேற விரும்பினால் அதற்கு அடுத்த படியாக இஹ்ஸான் என்ற தகுதி இருக்கின்றது. அது உமது சகோதரர் உமக்கு செய்த தீமைக்கு எதிரில் அவருக்கு நன்மை செய்வதாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் எவர் உங்களுக்கு நன்மை செய்யவில்லையோ அவர்களுக்கும் நன்மை செய்யுங்கள் என்று முதலில் கூறினார்கள். அதற்குப் பிறகு எவர் உங்களுக்கு தீங்கு விளைவிக்கின்றாரோ, உங்களுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றாரோ அவருக்கும் நன்மை செய்யுங்கள். இதுவே இஹ்ஸான் ஆகும் என்று கூறுகின்றார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அவர் உங்களை புண்படுத்தினால் அதற்கு பகரமாக நீங்கள் அவருக்கு சுகத்தை வழங்க வேண்டும். அதாவது அவர் உங்களுக்கு துன்பம் இழைத்தால் நீங்கள் அவரை மகிழ்விக்க வேண்டும். அவருக்கு சுகத்தை வழங்க வேண்டும்.

அடுத்து கூறுகின்றார்கள். கருணையுடன் நடந்து கொண்டவாறு பேருதவிகள் செய்தவாறு அவருக்கு வழிகாட்ட வேண்டும்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு ஈதாயிதுல் குர்பா என்ற தகுதி இருக்கின்றது. எந்த அளவு நீங்கள் உங்கள் சகோதரருக்கு உதவி செய்கின்றீர்களோ, மேலும் எந்த அளவுக்கு நீங்கள் மனித இனத்திற்கு நல்லதை நாடுகின்றீர்களோ அது எந்தவொரு சுய நோக்கத்துடனும் இருக்கக் கூடாது. எந்தவொரு நன்மையையும் பெறுவதற்காக இருக்கக் கூடாது. மாறாக, இயல்பாகவே எவ்வித சுய நோக்கமும் இல்லாமல் அது உங்கள் மூலமாக நிகழ வேண்டும். நெருங்கிய உறவினர்களோடு நடந்து கொள்வதைப் போன்றும் ஒரு குடும்பத்தினர் மற்ற குடும்பத்தினருக்கு நன்மை செய்வது போன்றும் அது இருக்க வேண்டும். ஒரு நெருங்கிய உறவினர் இன்னோர் உறவினருடனும், ஒரு சகோதரர் இன்னொரு சகோதரருடனும், ஒரு தாய் தனது குழந்தைகளுடனும் நடந்து கொள்வது போன்று பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். இதுவே நல்லொழுக்க முன்னேற்றத்தின் இறுதி சிறப்பாகும். அதாவது இவ்வாறு நன்மை செய்வது நல்லொழுக்கத்தின் இறுதி உச்சமாகும். இவ்வாறே அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதில் சுய நோக்கமோ அல்லது குறிக்கோளோ இடையில் வந்து விடக்கூடாது. மாறாக, சகோதரத்துவம் மற்றும் மனிதர்களுக்கு நெருக்கமாக இருப்பது ஆகியவற்றின் உணர்வு எந்த அளவு உயர்வானதாக இருக்க வேண்டுமென்றால் அதில் எந்த சுய நோக்கமும் இருக்கக் கூடாது என்று கூறுகின்றார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எவ்வகையிலும் ஒருவர் நமக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லது துஆ செய்ய வேண்டும். அல்லது ஏதாவதொரு வகையில் நமக்கு பலன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. மாறாக, இயல்பிலுள்ள உணர்வின் காரணமாக அந்த நன்மை செய்யப்பட வேண்டும். (இஸாலே அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 551, 552)

நன்மை எவ்வாறு செய்ய வேண்டுமென்றால் அதில் எந்த செயற்கைத்தன்மையும் இருக்கக் கூடாது. மனிதன் எனக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற விருப்பம் இருக்கக் கூடாது. நான் இந்த நன்மையை இவருக்கு செய்தால் இவர் எனக்காக துஆ செய்வார் என்ற விருப்பமும் கூட இருக்கக் கூடாது. இவ்வாறு எவ்வகையான விருப்பமும் இல்லாமல் இயல்பிலேயே உள்ள உணர்வின் காரணமாக செய்யப்படும் நன்மையே அசல் நன்மையாகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது தொடர்பாக மீண்டும் மீண்டும் நமக்கு எண்ணற்ற இடங்களில் போதித்துள்ளார்கள். இன்னும் சொல்வதென்றால் ஓரிடத்தில் அன்னார் இவ்வாறும் கூறுகின்றார்கள்:

அதாவது சில மக்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்தி விடுகின்றனர். தொழுகின்றனர். நோன்பு வைக்கின்றனர். வெளிப்படையாக பார்க்கும் போது அதிகமாக இபாதத் செய்பவர்களாகவும் நல்லவர்களாகவும் அவர்கள் தெரிகின்றனர். ஆனால் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துகின்ற விவகாரத்தில் அவர்களின் பார்வைகள் மாறி விடுகின்றன. அவர்களது நன்மைகளின் தரம் மாறி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியது முற்றிலும் உண்மையாகும். எனக்கும் கூட சில நேரங்களில் மக்கள் கடிதம் எழுதுகின்றனர். பிற மக்களுடன் சிலர் நடந்து கொள்கின்ற விஷயம் பற்றி அதில் குறிப்பிடுகின்றனர். சில பெண்கள் தமது கணவர்கள் தொடர்பாக எழுதுகின்றனர். அதையும் கடந்து சில பிள்ளைகள் தமது தந்தை தொடர்பாகவும் கடிதங்கள் எழுதுகின்றனர். அதில் எங்களது கணவர்கள் அல்லது தந்தை பள்ளிவாயில்களுக்கு செல்கின்றார். ஜமாஅத்தின் பணிகளையும் செய்கின்றார். ஆனால் வீட்டிலுள்ளவர்களுடன் அவர் நடந்து கொள்ளும் விதம் மிகவும் பொருத்தமற்ற முறையில் இருக்கின்றது என்று அவர்கள் எழுதுகின்றனர்.

இந்நிலையைப் பார்த்து சிலரது பிள்ளைகளின் மீது எந்த அளவு எதிர்மறையான தாக்கம் ஏற்படுகின்றதென்றால் அவர்கள் மார்க்கத்தை விட்டே அகன்று சென்று விடுகின்றனர். ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதிலிருந்தும் அகன்று சென்று விடுகின்றனர். மனைவியிடத்திலும், குழந்தைகளிடத்திலும் ஓர் ஆணுக்கு ஏதாவது முறையீடு இருந்தால் அதனை அன்புடனும், அமைதியான முறையிலும் அவர் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். வெளியில் உள்ளவர்களுக்கு முன்னால் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்வது அல்லது தொண்டு செய்வது ஆகியவை மட்டும் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதாக ஆகிவிடாது.

எல்லாவற்றிற்கும் முதலாவதாக தமது குடும்பத்திலுள்ளவர்களுக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும். இது கட்டாயமானதாகும். ஒருவர் வெளியில் சென்று அந்நியர்களுடன் தனக்கு மிக நெருக்கமானவர்களுடன் நடந்து கொள்வது போன்று நடந்து கொள்கின்றார். ஆனால் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களுடன் அந்நியர்களுடன் நடந்து கொள்வது போன்று நடந்து கொள்கின்றார் என்றால் இது எவ்வகையிலும் ஆகுமானதல்ல. அல்லாஹ் எவரிடமெல்லாம் நல்ல முறையில் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறியுள்ளான். நமக்கு மிகவும் நெருக்கமானவர்களிலிருந்து அப்பட்டியலை அவன் ஆரம்பித்துள்ளான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔا وَّ بِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّبِذِی الْقُرْبٰی وَالْيَتٰمٰی
وَالْمَسٰكِيْنِ وَالْجَارِ ذِی الْقُرْبٰی وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْۢبِ وَابْنِ السَّبِيْلِ
وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ۭ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرًا

அதாவது, அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு இணையாக எதனையும் வைக்காதீர்கள். பிறகு பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அதற்குப் பிறகு நெருங்கிய உறவினர்களுடனும், அனாதைகளுடனும், ஏழைகளுடனும், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும், உங்களுடன் இருப்பவர்களுடனும், வழிப்போக்கர்களுடனும், உங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களுடனும் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஆணவம் கொண்டவர்களையும், பெருமை அடிப்பவர்களையும் விரும்புவதில்லை.

இந்த வரிசைக் கிரமத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தாய் தந்தையருக்குப் பிறகு மனைவி மற்றும் பிள்ளைகள் நெருக்கமானவர்களாக இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு சகோதர சகோதரிகள் வருகின்றனர். பிறகு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது பலவகை மக்கள் வருகின்றனர். அண்டை வீட்டுக்காரர்கள் வருகின்றனர். உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உறவினர் அல்லாத அண்டை வீட்டுக்காரர்கள் ஆகியோர் அதில் வருகின்றனர். இன்னும் சொல்வதென்றால், அண்டை வீட்டுக்காரர்களின் பட்டியலை ஹுஸூர் (அலை) அவர்கள் எந்த அளவு நீளமாக்கி விட்டார்கள் என்றால் உங்களுக்கு பக்கத்தில் இருக்கின்ற நாற்பது வீடுகள் வரை, நூறு வீடுகள் வரை இருப்பவர்கள் உங்களது அண்டை வீட்டுக்காரர்கள் ஆவர் என்று அன்னார் கூறுகின்றார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 280. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இதற்குப் பிறகு சபைகளில் உங்களுடன் அமர்பவர்கள், பள்ளிவாசலில் அமர்பவர்கள், ஜுமுஆவில் அமர்பவர்கள் ஆகிய இவர்கள் அனைவரும் அண்டை வீட்டுக்காரர்களாக ஆகிவிடுகின்றனர். பயணம் செய்யும் போது உங்களுக்கு அருகில் அமர்ந்திருப்பவர் அண்டை வீட்டுக்காரராக ஆகிவிடுகின்றார். அவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். எவர்களுக்கு நீங்கள் எஜமானராக இருக்கின்றீர்களோ அவர்கள் அனைவருடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இந்த வரிசைக் கிரமத்தில் ஒவ்வொருவருக்குரிய உரிமையும் நிலைநாட்டப்பட்டு விட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவருக்குரிய உரிமை வழங்கப்பட்டு இன்னொருவருக்குரிய உரிமை வழங்கப்படாமல் இல்லை. மாறாக, அனைவருக்குமுரிய உரிமை நிலைநாட்டப்பட்டு விட்டது. எவருக்கு எதிராகவும் அவரது உரிமையை நாம் பறித்து விடக்கூடாது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : நீங்கள் இறைவனை வணங்குங்கள். எதனையும் அவனுக்கு இணையாக ஆக்கி விடாதீர்கள். உங்களது பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களது நெருங்கிய உறவினர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நெருங்கிய உறவினர் என்ற சொல்லில் சந்ததிகள், சகோதரர், அருகிலுள்ள மற்றும் தூரத்து உறவினர்கள் அனைவரும் வந்து விடுவர். மனைவி மக்களும் வந்து விடுவர்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அனாதைகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். ஏழைகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும் அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும் ஏதாவதொரு பணியில் உங்களுடன் சேர்ந்து ஈடுபட்டுள்ள உங்களது நண்பர்களுடனும், பயணத்தில் அல்லது தொழுகையில் உங்களுடன் இருப்பவர்களுடனும் அல்லது மார்க்க அறிவை பெற்றுக் கொள்வதற்காக உங்களுடன் இருப்பவர்கள், பயணிகள், உங்களது ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற எல்லா விலங்குகள் (விலங்குகளின் பெயரையும் அன்னார் குறிப்பிட்டார்கள்) ஆகிய இந்த எல்லாரிடத்திலும் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். கர்வம் கொண்டிருப்போரையும் பிறர் மீது கருணை காட்டாமல் பெருமையடிப்பவர்களையும் அல்லாஹ் தனது நண்பனாக ஆக்கிக் கொள்வதில்லை. (செஷ்மயே ம:ஃரிஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 208,209)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நீங்கள் தாய் தந்தையருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நெருக்கமானவர்களுடனும், அநாதைகளுடனும், ஏழைகளுடனும், உங்களுக்கு நெருக்கமான அண்டை வீட்டுக்காரர்களுடனும், உங்களுக்கு அறிமுகமில்லாத அண்டை வீட்டுக்காரர்களுடனும், வழிப்போக்கர்களுடனும், வேலைக்காரர்களுடனும், அடிமைகளுடனும், விலங்குகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். (அன்னார் விலங்குகளின் விவரத்தை குறிப்பிட்டுள்ளார்கள்). அதாவது குதிரை, ஆடு, காளை மாடு, பசு மேலும் உங்களது ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற உயிரினங்கள் ஆகியவற்றுடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால் உங்களது இறைவனுக்கு இந்த பழக்கங்கள் படித்தமானவை ஆகும். சுயநலக்காரர்களையும், பொருட்படுத்தாமல் இருப்பவர்களையும் அவன் விரும்புவதில்லை. (இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம், ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 358)

அனுதாபம் காட்டுகின்ற இந்த வட்டத்தை மேலும் நன்மைகள் செய்வதை விலங்குகள் வரை அன்னார் கொண்டு சென்று விட்டார்கள். விலங்குகளின் பெயர்களை எடுத்துக் கூறி நமக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். விலங்குகளுடன் கூட அனுதாபத்துடன் நடந்து கொள்ளுமாறு அன்னார் கூறும்போது நாம் நமது வீட்டில் உள்ளவர்கள், மனைவி மக்கள் ஆகியோருக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இவ்வாறே படிப்படியாக ஒரு தகுதிக்கு பின்னர் அடுத்த தகுதியிலுள்ள ஏனையவர்களுடனும் நாம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். பிறகு இந்த உரிமைகளை செலுத்தாமல் இருப்பவர்கள் தொடர்பாக அவர்கள் ஆணவம் கொண்டவர்களாகவும், பெருமை அடிக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

பிறகு இத்தகையவர்கள் நன்றிகேடு காட்டுபவர்களாக ஆகி விடுகின்றனர். அல்லாஹ்வுக்கு நன்றிகேடு காட்ட ஆரம்பித்து விடுகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு மனைவி மக்களை வழங்கி இருக்கின்றான். எனவே அவர்கள் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை என்றால் அது அல்லாஹ்விற்கு நன்றிகேடு காட்டுவதாகவே ஆகிவிடும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள் : ஷரீஅத்தில் இரு வகையான உரிமைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று அல்லாஹ்விற்குரிய உரிமைகள் ஆகும். மற்றொன்று அடியார்களுக்குரிய உரிமைகளாகும். ஒருவர் மிகவும் பாக்கியமற்றவராக இருந்தாலேயொழிய அவருக்கு அல்லாஹ்விற்குரிய உரிமைகளை நிலைநாட்டுவது

எளிதான காரியம்தான். ஏனென்றால், அந்த இறைவன் உங்களிடம் சாப்பிடுவதற்காக எதையும் கேட்கவில்லை. வேறு எவ்வகையிலான தேவையும் அவனுக்கு இல்லை. (அவனுக்கு எந்த தேவையும் இல்லை. உங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீங்கள் அவனிடம் கேட்கும் போது அவன் இல்லை என்று கூறுவதுமில்லை). அவன் உங்களுடன் விரும்புவதெல்லாம், அவன் ஏகனாக இருக்கின்றான். அவனுக்கு இணையாக எதுவும் இல்லை என்று நீங்கள் கருத வேண்டும். அவனது முழுமையான பண்புகளின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அவன் அனுப்பிய தூதர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களை பின்பற்றி நடக்க வேண்டும். ஆனால் அடியார்–களுக்குரிய உரிமைகளை செலுத்துவதில்தான் கஷ்டங்கள் உருவாகின்றன. அங்கு நஃப்ஸ் ஒருவரை ஏமாற்றி விடுகின்றனது. (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 19. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே நம்மால் இயன்ற வரை அடியார்களுக்குரிய உரிமைகளை பாதுகாக்க வேண்டும். ஒரு மனிதன் பிறரது உரிமைகளை பறிப்பவனாக இருக்கக் கூடாது. நம்பிக்கை கொண்ட ஒருவருக்கு இது நிபந்தனையாக விதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அவர் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் கூட முழுமையாக செலுத்த வேண்டும். இந்த உரிமைகளை செலுத்துவதின் முதல் பொறுப்பை அல்லாஹ் அவர்கள் மீதே சுமத்தியுள்ளான். வெறுமனே பொருளை செலுத்துவதின் உரிமை மட்டும் இதில் வந்து விடாது. மாறாக, ஒருவரது உணர்விற்கு மதிப்பளித்து அதற்குரிய உரிமையை செலுத்துவதும் அவசியமானதாகும். சில மக்கள் நாங்கள் எங்களது வீட்டிலுள்ளவர்களது பொருளாதார தேவையை நிறைவேற்றி விடுகின்றோம். பிறகும் கூட அவர்கள் நன்றிகேடு காட்டுகின்றனர் என்று கூறுகின்றனர். அவர்கள் பொருளாதார தேவைகளையும் பௌதீக தேவைகளையும் நிறைவேற்றுகின்றனர் என்றால் பிறகு மனைவி மக்களும் கூட குறிப்பாக தமது கணவன்மார்களுக்கும், தந்தையருக்கும் நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் ஆண்களும், அவர்களது உணர்வு–களுக்கு மதிப்பளித்து அதை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். இதுவும் கூட உரிமையை செலுத்துதே ஆகும்.

நல்ல முறையில் நடந்து கொள்வதும் அவசியமானதாகும். மனிதன் விலங்கு அல்ல. விலங்கிற்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் கொடுத்து விட்டால் அதனுடன் தொடர்புள்ள கடமையை நாம் நிறைவேற்றி விடுகின்றோம். மனிதனைப் பொறுத்த வரையில் அவனது உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அவ்விஷயத்–திலும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். எனவே இவ்விஷயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஈமானை முழுமையடையச் செய்வதற்கு இந்த இரு உரிமைகளையும் செலுத்த வேண்டியது அவசியமானதாகும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மார்க்கத்தின் முழுமையான இரு பகுதிகள் உள்ளன. ஒன்று இறைவன் மீது அன்பு கொள்வ–தாகும். மற்றொன்று மனித இனத்தின் மீது அன்பு கொள்வதாகும். எந்த அளவு அன்பு கொள்ள வேண்டுமென்றால், அவர்களின் துன்பத்தை தமது துன்பமாக கருத வேண்டும். மேலும் அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். (நஸீமே த.ஃவத், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 464)

இங்கும் கூட தகுதியின் அடிப்படையில் நெருக்கமானவர்கள் பற்றிய வரிசைக் கிரமத்தை நாம் கருத்தில் கொண்டவாறு மனித இனத்தின் மீது நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். பிறகு பொதுவாக ஒவ்வொருவர் மீதும் அன்பு கொள்ள வேண்டும். எந்த அளவு அன்பு கொள்ள வேண்டும் என்றால் அவர்களின் துன்பத்தை தமது துன்பமாக கருத வேண்டும். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற நமது முழக்கத்தின் அசல் கருத்தும் இதுவேயாகும். மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதிலும், அவர்கள் மீது அன்பு கொள்வதிலும் எந்த அளவு முன்னேற வேண்டுமென்றால் அவர்களது துன்பத்தை நமது துன்பமாக நாம் கருத வேண்டும். இதுவே மனித இனத்துடன் அனுதாபம் காட்டுவதின் உண்மை நிலையாகும். நமக்கு நெருக்கமானவர்களுடன் நமக்கு இருக்கும் தொடர்புகளில் மாசு இருந்தால் பிறகு ஏனையவர்களுடன் நாம் எவ்வாறு நமது அன்பை வெளிப்படுத்திக் காட்ட முடியும்.

எனவே இந்த வகையில் இந்த பெருநாளில் உரிமைகளை செலுத்துவதின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமது குடும்பத்தினருடனும், தனக்கு பிரியமான வருடனும், தனது சுற்றுச் சூழலிலுள்ள மற்றவர்களுடனும் உள்ள தொடர்புகளிலும், வேறு எவருடன் உள்ள தொடர்பிலும் கடுமையுடன் நடந்து கொண்டால் அதை அகற்றுவதற்கு அவர் முயற்சி செய்ய வேண்டும். கடுமையாக நடந்து கொள்வதை மென்மையாகவும் நெருக்கத்துடனும் நடந்து கொள்வதாக மாற்றிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் பண்புகள் மிகவும் முழுமையானவை–யாக இருக்கின்றன. ஆனால் அல்லாஹ் எனது பண்புகளை பிரதிபலிப்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளான். அவற்றிற்கேற்ப செயல்பட நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். தத்தமது ஆற்றல்களுக்கேற்ப இந்த நற்பண்புகளை பேணி நடப்பதற்காக முயற்சி செய்வதும் கூட அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதாகவே இருக்கின்றது. மனிதன் தனக்கு இருக்கின்ற ஆற்றல்களின் உச்சம் வரை சென்று பிறகு அவற்றிற்கேற்ப அழகு மற்றும் பேரருளின் முன்மாதிரியை காட்ட வேண்டும். அதன் மூலம் இந்த பெருநாளின் மகிழ்ச்சி உங்களது சொந்த மகிழ்ச்சியாகவும், உங்களது சுற்றுச் சூழலின் எல்லைக்கு உட்பட்ட மகிழ்ச்சியாக மட்டும் இருக்காது.

மாறாக, அதிலிருந்து வெளியேறி சமுதாயத்திலும் கூட அது பரவி விடும். ஒருவர் மற்றவருக்குரிய உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆகிவிடுவர். பிறகு ஜமாஅத்தின் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் கூட உரிமைகளை செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எங்கு இந்த விஷயங்கள் உண்மையான மகிழ்ச்சிகளை வழங்குகின்றதோ அங்கு ஜமாஅத்தின் முன்னேற்றமும் கூட இதில் தான் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம்.

இது பற்றி நமக்கு வழிகாட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பலகீனமான சகோதரர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு ஆற்றலை வழங்குவது நமது வழிமுறையாக இருக்க வேண்டும். இரு சகோதரர்கள் இருக்கின்றனர். ஒருவருக்கு நீந்தத் தெரியும். மற்றவருக்கு நீந்தத் தெரியாது. முதலாமவர் இரண்டாவது நபரை மூழ்குவதில் இருந்து காப்பாற்றுவது அவரது கடமையா? அல்லது அவரை மூழ்கவிட வேண்டுமா? மூழ்குவதில் இருந்து அவரை காப்பாற்றுவது அவரது கடமையாக இருக்கின்றது. எனவே தான் திருக்குர்ஆனில் இவ்வாறு வந்துள்ளது. நன்மையிலும் இறையச்சத்திலும் உங்களில் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு நல்குங்கள். அதாவது பலகீனமான சகோதரர்களின் சுமையை சுமக்க வேண்டும். அவர்களது செயல் அளவிலான மற்றும் ஈமான் அளவிலான மற்றும் பொருள் அளவிலான பலகீனங்களில் அவர்களுடன் பங்கு பெற வேண்டும். அவற்றை அகற்ற வேண்டும். உடல் அளவிலான பலகீனங்களக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

பலகீனமானவர்களுக்கு ஆற்றலையும், ஆதரவையும் வழங்காதவரை எந்தவொரு ஜமாஅத்தும் ஜமாஅத்தாக இருக்க முடியாது. அவர்களது குறைகளை திரையிட்டு மறைக்க வேண்டும். சஹாபாக்களுக்கும் இந்த போதனையே வழங்கப்பட்டிருந்தது. அதாவது புதிய முஸ்லிம்களின் பலகீனங்களைப் பார்த்து கோபம் கொள்ளக் கூடாது. ஏனென்றால் நீங்களும் கூட அவ்வாறே பலகீனமானவர்களாகத்தான் இருந்தீர்கள். பெரியவர்கள் சிறியவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். அன்புடனும் மென்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

பாருங்கள்! ஒருவர் மற்றவரை தின்று கொண்டிருந்தால் அது ஜமாஅத்தாக இருக்க முடியாது. (ஒருவர் மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்யக்கூடாது என்று கூறுகின்றார்கள்). நான்கு பேர் ஒன்றாக அமர்ந்திருக்கும்போது ஒருவர் தனது ஏழை சகோதரர் தொடர்பாக புகார் கூறினால் அவரது குறைகளை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தால் பலகீனமானவர்களையும் ஏழைகளையும் அற்பமாக பார்ப்பதாக இருந்தால், வெறுப்புடன் பார்ப்பதாக இருந்தால் அவ்வாறு ஒருபோதும் செய்யக் கூடாது. மாறாக, ஒன்றுபட்டு இருப்பதிலேயே ஆற்றல் பிறக்கின்றது. ஒன்று உருவாகின்றது. அதன் மூலம் அன்பு ஏற்படுகின்றது. அருள்கள் உருவாகின்றன. இவ்வாறெல்லாம் இருக்கும் போது நல்லொழுக்கத்தின் ஆற்றல்களை விரிவுபடுத்தாமல் நாம் ஏன் இருக்க வேண்டும்? உங்களது நல்லொழுக்கத்தை மிகவும் விரிவுபடுத்–துங்கள். அனுதாபத்துடனும், அன்புடனும், மன்னிக்கும் தன்மையுடனும், கருணையுடனும் நடந்து கொண்டவாறு அவற்றை பொதுவானதாக ஆக்கும்போதுதான் இது சாத்தியமாகும். ஒவ்வொருவருக்காகவும் இதை பொதுவானதாக ஆக்கிவிட வேண்டும். மற்றவருக்கு பலன் தரக்கூடிய பணியை செய்ய வேண்டும்.

*(தொடர்ச்சி 7-வது பக்கம்...)*

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

# எச்சரிக்கை மற்றும் நற்செய்தியினைக் கொண்ட முன்னறிவிப்புகளின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம்

மவ்லவி சுல்தான் அஹ்மது ஸஃபர்

*(இதழ் 3, தொகுதி 12,13-ன் தொடர்ச்சி...)*

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த இறை அறிவிப்புகளில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு காலத்திற்கு முன்பாகவே அன்னாருக்கு எதிர்ப்பு இருக்கும் என்றும் மேலும் அன்னாரது ஜமாஅத்திற்கு எதிர்ப்பு இருக்கும் என்றும் எதிரிகள் அன்னாரது பணிகளை அழிப்பதற்கு முடிந்த அளவு முயற்சி செய்வார்கள் என்றும் தெரிவித்திருந்தான். மேலும் இந்த எதிர்ப்பில் மக்களும் வருவார்கள். மேலும் ஜமாஅத்துகளும் எதிர்க்கும் என்றும் அன்னாருக்கு கூறப்பட்டது. மேலும் ஆட்சிகளும் மோத முயற்சிப்பார்கள். ஆனால் மறைவானவற்றை அறியக்கூடிய மற்றும் வல்லமையுடைய அந்த இறைவன் அவர்களை இழிவடையச் செய்வான். மேலும் அவர்கள் தங்களுக்குள் பிரிந்து துண்டு துண்டாகி விடுவர் என்றும் அவன் முன்னறிவித்துள்ளான்.

சகோதரர்களே! அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு இந்த முன்னறிவிப்புகளுக்கேற்பவே நடந்து கொண்டான். எதிரிகள் இயன்ற அளவு முயற்சித்தார்கள். எல்லா வகையான சூழ்ச்சிகளையும் செய்தார்கள். ஆனால் அல்லாஹ் அவர்களின் சூழ்ச்சிகளை அவர்களின் பக்கமே திருப்பினான். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எல்லா வகையிலும் வெற்றி பெற வைத்தான்.

பாருங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கடுமையான எதிரியாகிய அன்னாரை பொய்ப்படுத்தியதில் முதன்மையானவரான மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் முடிவு என்னவாயிற்று? நான் தான் இந்த நபரை உயர்த்தினேன். இப்போது நானே இவரை வீழ்த்துவேன் என்று அவர் கூறினார். உண்மையில் அவரின் இந்த வாதத்தில் எனது இந்த முயற்சிகளினால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு புகழ் கிடைத்தது. மேலும் இப்போது நானே அவரை இழிவுபடுத்துவேன் என்று அறிவித்தார். ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு உயர்வான மதிப்பையும், மரியாதையையும் வழங்கினான் என்பதையும் மேலும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியை எவ்வாறு இழிவடையச் செய்தான் என்பதையும் உலகம் கண்டது. இன்று முழு பட்டாலாவிலும் எவரிடத்திலாவது சென்று மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தொடர்பாக கேட்டுப் பாருங்கள். எவரும் அவரது பெயரைக் கூட அறிய மாட்டார்கள். அவரது வீடு எங்கிருந்தது? அவர் எங்கு அடக்கம் செய்யப்பட்டார்? என்பதை பற்றி ஒருவர் கூட சொல்ல மாட்டார். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி இன்று முழு உலகிலும் ஒளித்துக் கொண்டிருக்கின்றது. முழு உலகிலும் அன்னாருக்காக உயிரையும் தியாகம் செய்ய தயாரானவர்கள் உள்ளனர். இதே போன்று மவ்லவி சனாவுல்லாஹ் அமிர்தஸரி இருந்தார். எவர் தன்னை பற்றி காதியானை வெற்றி கொண்டவர் என்று கூறி வந்தாரோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாஹிலாவிற்கான அழைப்பு விடுத்த போது உண்மையாளரின் வாழ்வில் பொய்யர் மரணிப்பது என்பது உண்மையை அறிந்து கொள்வதற்கான அளவுகோல் கிடையாது என்றும் பொய்யன் முஸைலமாவின் உதாரணத்தைக் கூறி பொய்யர்களுக்கு நீண்ட அவகாசம் வழங்கப்படுகிறது என்பது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது என்றும் அவ்வாறு தான் முஸைலமாவிற்கும் நீண்ட ஆயுள் வழங்கப்பட்டது என்றும் முபாஹிலாவிலிருந்து தப்பிப்பதற்காக தொடர்ந்து எழுதி வந்தார்.

ஆக, அவருடைய இந்த அளவுகோலிற்கு ஏற்பவே அவருக்கு நீண்ட ஆயுள் வழங்கப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின் போது இவர் இனி மேல் அவரின் பெயரைக் கூட கூற முடியாத அளவிற்கு எவரும் மிஞ்சாத வண்ணம் மிர்ஸா சாஹிபின் அனைத்து புத்தகங்களையும் ஒன்று சேர்த்து அவற்றை எரித்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏக்கத்தோடு கூறினான். அவனுடைய முடிவு எவ்வாறிருந்தது என்றால் 1947 ல் நடந்த குழப்பங்களில் அவர் இருக்கும் போதே அவருடைய ஒரே மகன் அவரது நூலகம் அவரது கண்களுக்கு முன்பே எரித்து சாம்பலாக்கப்பட்டது. மிகவும் தோல்வியடைந்து, இழிவடைந்து இவ்வுலகத்தை விட்டு அவர் சென்றார். ஆனால் அஹ்மதிய்யத்தை அவரால் அசைக்க கூட முடியவில்லை.

கண்ணியத்திற்குரியவர்களே! இத்தருணத்தில் நான் சுருக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழிவை விரும்பிய ஒரு சில எதிரிகளின் பெயரை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். சிலர் அவர்களுக்கு சாபம் வழங்கினர். மேலும் சிலர் முபாஹிலாவின் காரணமாக அழிவிற்குள்ளாகினர்.

உதாரணமாக, மவ்லவி நஸீர் ஹுஸைன் தெஹலவி. இவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக குஃப்ரின் எதிர்ப்பை மூட்டினார். மக்காவிலிருந்து குஃப்ர் பட்டம் வாங்கிய மவ்லவி குலாம் தஸ்தகீர் கசூரி, மவ்லவி ரஷீத் அஹ்மது கங்கோஹி, ஷா தீன் லூதியானவி, அமெரிக்காவின் அலெக்ஸான்டர் டூயி, மவ்லவி அப்துல் மஜீத் தெஹலவி, சஅதுல்லாஹ் லூதியானவி, லூதியானாவைச் சார்ந்த மவ்லவி முஹம்மது, மவ்லவி அப்துல் அஸீஸ், மவ்லவி அப்துல்லாஹ் இவர்கள் அனைவரும் முபாஹலாவின் விளைவாக மோசமான மரணத்திற்கு ஆளாகினர். அதே போல் முஹையுத்தீன் லகூக்கே வாலே, நூர் முஹம்மது ஃபடீசெட், சராக் தீன் ஜமூனி, மவ்லவி குலாம் ரஸூல் அமிர்தஸரி, அலிகார் யை சார்ந்த இஸ்மாயீல், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பீன் வாலே.

இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக துஆ செய்தனர். மேலும் இவர்களின் பெரும்பாலார் ப்ளேக் நோயின் தண்டனையினால் அழிந்தனர். (விவரம் அறிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஹகீக்கத்துல் வஹீ என்ற நூலை பார்க்கவும்.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதை வரிகளில் கூறுகின்றார்கள்:

நீயே அனைத்து எதிரிகளையும் குழியில் தள்ளினாய்– ஆனால் நம்மை மினாராவைப் போல் உயர்த்தினாய் எனது எதிர்ப்பில் இவர்கள் தோற்றனர்– அவர்களாக மரணிக்கவில்லை; நீ தான் அவர்களை அழித்தாய் தீயவர்களின் மீது அவர்களின் தீங்கு அவர்களின் மீதே விழட்டும்– நமது நோக்கத்தை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்களுக்கு துக்கம் நமது வீட்டிலோ திருமணம்– என்னுடைய எதிரிகளை பிடித்த இறைவன் தூயவன்.

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த எதிரிகள் யார் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்நாளிலேயே இறை வாக்குறுதிக்கேற்பவர்கள் இழிவின் குழியில் தள்ளப்பட்டனர். அன்னாருக்குப் பிறகும் கூட நிறைய குழப்பங்கள் எழுந்தன. உதாரணமாக, 1934 ல் மஜ்லிஸே அஹ்ரார் எழுந்தது. அஹ்ராரிகளின் தோற்றுநர் செய்யது அதாவுல்லாஹ் ஷா புகாரி அவர்கள் அஹ்மதிகளை மஸீஹின் ஆடுகள் என்று கூறி எள்ளி நகையாடி வந்தார். மேலும் அஹ்மதிய்யத்தை அழிப்பதற்காக நிறைய கைகள் எழுந்தன. ஆனால் இறைவன் எனது கைகளால் இவர்களை அழிக்க விரும்பியுள்ளான் என்று கூறியவருக்கு இறை நியதிக்கேற்ப இருந்தது. அவரின் முடிவுக்கு உலகம் சாட்சியாக உள்ளது. 1974 ல் அண்டை நாட்டின் பிரதமமந்திரியான ஸுல்ஃபிக்கார் அலி பூட்டோ அவர்கள் ஆலிம்களை மகிழ்ச்சியடையச் செய்ய பாகிஸ்தானின் பாராளுமன்றத்தில் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர் என்று அறிவிக்கின்ற சட்டத்தை இயற்றி இப்போது எனது நாற்காலியை

எவராலும் அசைக்க முடியாது என்று கருதி வந்தபோது அவர் கல்புன் யமுத்து அலா கல்பின் அதாவது ஒரு நாய் நபியின் மீது மரிக்கும் என்ற இறை அறிவிப்பிற்கேற்ப அவரை உலகின் எந்த சக்தியாலும் கொடூரமான இறை தண்டனையிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

பிறகு இன்னொரு இராணுவ சர்வாதிகாரி அஹ்மதிய்யத்தை கேன்ஸர் என்று கூறி வந்தார். அஹ்மதிகளை கஷ்டத்திற்கு உள்ளாக்கவும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீது கை வைப்பதற்கு மிகவும் அநீதிகரமான சட்டத்தை இயற்றினார். ஆனால் அல்லாஹ் அற்புதமான முறையில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு பாதுகாப்பாக லண்டன் ஹிஜ்ரத் செய்யும் நல்வாய்ப்பை வழங்கினான். மறுபக்கம் முபாஹிலாவின் விளைவாக அக்காலத்தின் ஃபிர் அவ்னான அச்சர்வாதிகாரி தன்னுடைய பாதுகாவர்களோடு பயணித்த போது விமானம் விபத்துக்குள்ளானதில் அது வானில் அவ்வாறு சிதறியது என்றால் அதனின் எந்தவொரு பகுதியும் எஞ்சியிருக்கவில்லை. ஃபிர்அவ்ன்கள் மற்றும் ஹாமான்களின் முடிவுகள் இவ்வாறே இருந்து வந்துள்ளது என்பது உண்மையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னுடைய அழிவை விரும்புவது இவர்களின் தவறாகும். மேலும் முழுக்க முழுக்க இவர்களின் துரதிஷ்டமாகும். நான் எப்படிப்பட்ட மரம் என்றால் இதன் உண்மையான எஜமானன் இதை தனது கைகளினால் நட்டியுள்ளான். எவர் என்னை வெட்ட நினைப்பாரோ அவர்களின் முடிவு காரூன் மற்றும் யூதாஸ் மற்றும் அபூ ஜஹிலின் முடிவைத் தவிர வேறு என்னவாக இருக்கும்?

மக்களே! இறுதி நொடிப்பொழுது வரை விசுவாசத்தோடு இருக்கும் அந்த கை என்னோடு இருக்கின்றது. உங்களுடைய ஆண்களும், உங்களுடைய பெண்களும், உங்களுடைய இளைஞர்களும், உங்களுடைய முதியவர்களும், உங்களுடைய சிறியவர்களும், உங்களுடைய பெரியவர்களும் அனைவரும் ஒன்று சேர்ந்து என்னுடைய அழிவிற்காக துஆ செய்து சஜ்தா செய்து செய்து மூக்கு தேய்ந்து போனாலும் கைகள் செயலிழந்து போனாலும் கூட இறைவன் ஒருபோதும் உங்களுடைய துஆக்களை கேட்க மாட்டான். மேலும் அவன் தனது பணியை முழுமையடையச் செய்யாதவரை ஒருபோதும் ஓய மாட்டான். (ரூஹானி கஸாயீன் தொகுதி 17 துஃபா கோல்டவியா இணைப்பு பக்கம் 49).

கண்ணியத்திற்குரியவர்களே! இப்போது நான் ஒரு மகத்தான முன்னறிவிப்பு பற்றி கூற விரும்புகின்றேன். 1896 ஆம் ஆண்டின் இறுதியில் ப்ளேக் நோய் மும்பை மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களை தாக்கியது. மேலும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோயின. அப்படிப்பட்ட நேரத்தில் பஞ்சாபில் ப்ளேக்கிற்கான எவ்வித அறிகுறியும் இருக்கவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பஞ்சாபிலும் ப்ளேக் நோய் பரவும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 6 பிப்ரவரி 1898 அன்று மனித குலத்தின் மீதுள்ள அனுதாபத்தின் காரணமாக பிரசுரம் ஒன்றை வெளியிட்டு ஒரு அறிவிப்பை செய்தார்கள்.

அதாவது பிளேக் தொடர்பாக எனக்கு இல்ஹாம் வந்துள்ளது. அதிலிருந்து இதுவொரு நிபந்தனையோடு நீங்கக்கூடிய ஒரு இறை நியதி என்று தெரிய வருகிறது. மக்கள் தங்களுடைய செயல்களை சீர்திருத்திக் கொண்டால் மற்றும் பாவமன்னிப்பு கோரி சதகா கொடுத்தால் இந்த துயரத்திலிருந்து தப்பிக்கலாம்.

மேலும் எச்சரிக்கை செய்தவாறு அன்னார் கூறினார்கள்: மிகவும் கடினமான நாட்கள் வரவிருக்கின்றன. துன்பம் வாசலில் நின்று கொண்டிருக்கின்றது. (ரூஹானி கஸாயின் தொகுதி 14 அய்யாமுஸ்ஸுலுஹ பக்கம் 363).

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த முன்னறிவிப்பு பற்றி எள்ளி நகையாடப்பட்டது. பலர் ஏசிப் பேசினார்கள். மேலும் பல்வேறு வகையான ஆட்சேபனைகளை எழுப்பினர். ஆனால் இறுதியில் ப்ளேக் நோய் பஞ்சாபிற்குள் நுழைந்தது. மேலும் எப்படிப்பட்ட அழிவை கொண்டு வந்தது என்றால் ஒரு கியாமத்தைப் போன்ற நிலை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான கிராமங்கள் காலியாகின. நூற்றுக்கணக்கான நகரங்கள் வெருண்டோடிப் போயின. மேலும் ஒரு கோடியே இருபது லட்சம் பேர் மரணித்தார். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 2 பக்கம் 6)

இச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப் –பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இறைவனுடைய மஸீஹை மறுத்ததன் காரணத்தால் தான் இந்த ப்ளேக் நோய் வந்துள்ளது. அவரை கொலை செய்வதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. அவர் காஃபிர் என்றத் தஜ்ஜால் என்றும் அழைக்கப்பட்டார். இந்த ப்ளேக் என்னுடைய உண்மைத்துவத்திற்கு அடையாளம் ஆகும்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அவன் என்னுடைய ஜமாஅத்தின் மக்களை ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பான். எனவே அவர்கள் தடுப்பூசி கூட போடத் தேவையில்லை என இறைவன் எனக்கு தெரிவித்துள்ளான்.

இந்த மகத்தான முன்னறிவிப்பின் குறிப்பான ஒரு அம்சம் என்னவென்றால் அன்னார் கூறினார்கள்: இந்த கிராமத்தை அதாவது காதியானை அல்லாஹ் ப்ளேக் நோயின் அழிவிலிருந்து பாதுகாப்பாக வைப்பான் என்று இறைவன் எனக்கு தெரிவித்துள்ளான்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாரின் எதிரிகளுக்கு இந்த சிறப்பான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது உண்மைத்துவத்தை நிரூபிக்குமாறு அழைப்பு விடுத்தார்கள். அதாவது காதியானுக்கு நிகராக வேறு ஏதேனும் ஒரு நகரத்தின் பெயரைக் கூறி அது ப்ளேக் நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் முன்னறிவிக்கட்டும். ஒவ்வொரு எதிரியின் பெயரையும் கூறி அன்னார் அவர்களுக்கு ரோஷமூட்டினார்கள்.

உதாரணமாக, மியான் ஷம்சுத்தீன் மற்றும் அவருடைய அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமின் உறுப்பினர்கள் லாஹூர் தொடர்பாக அந்த நகரம் ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று அறிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்கள். அப்துல் ஜப்பார் மற்றும் அப்துல் ஹக் ஆகியோர் அமிர்தஸரஸ் நகரம் ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று அறிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்கள். பிறகு வஹாபி கூட்டத்தினரின் ஆணி வேர் தில்லியாக இருந்ததன் காரணமாக நஸீர் ஹுஸைன் மற்றும் முஹம்மது ஹுஸைன் தெஹலவி போன்றோரிடம் தில்லி நகரத் ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்கள். மேலும் அஹ்மது ஹஸன் அம்ரோஹி அம்ரூஹா நகரம் ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னுடைய இந்த அடையாளம் அதாவது ஒவ்வொரு எதிரியும் அவர் அம்ரூஹாவில் வசித்து வந்தாலும் சரி; அமிர்தஸரஸில் இருந்தாலும் சரி; தில்லியில் இருந்தாலும் சரி; அவர் கொல்கத்தாவில் இருந்தாலும் சரி; அவர் லாஹூரில் இருந்தாலும் சரி; கோல்டாவில் இருக்கக் கூடியவராக இருந்தாலும் சரி; பட்டாலாவில் இருந்தாலும் சரி. அவருடைய இந்த ஊர் ப்ளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் சத்தியம் செய்து கூறினால் நிச்சயமாக அந்த ஊர் ப்ளேக் நோயால் பீடிக்கப்படும். ஏனென்றால் அவர்கள் இறைவனுக்கு எதிராக அவதூறு செய்துள்ளனர்.

சுருக்கமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய இந்த அழைப்பை ஏற்பதற்கு எந்த எதிரியும் தயாராக இருக்கவில்லை.

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த ப்ளேக் நோய் நமது ஜமாஅத்தின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது. மேலும் நம்முடைய எதிரிகளை அழித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் ஐநூறு பேர் அல்லது சில நேரங்களில் ஆயிரம் பேர் இந்த ப்ளேக் நோயின் காரணமாக நமது ஜமாஅத்தில் இணைகின்றார். எனவே ப்ளேக் நமக்கு அருளாகும். மேலும் நம்முடைய எதிரிகளுக்கு சாபாமும், தண்டனையும் ஆகும். இதற்கு நேர் மாற்றமாக நடந்தால் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

அதை நிரூபிப்பவருக்கு நான் ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்குவதற்கு தயாராக உள்ளேன். இந்த போட்டியில் நமக்கு எதிராக நின்று ஆயிரம் ரூபாயை நம்மிடமிருந்து பெறக் கூடியவர் யாராவது இருக்கின்றாரா? (ரூஹானி கஸாயின் தொகுதி 22 ஹகீக்கத்துல் வஹீ நிறைவுப் பகுதி பக்கம் 568).

உலக மற்றும் அரசியல் ரீதியிலான புரட்சி மற்றும் இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றி பற்றிய முன்னறிவிப்பு

கண்ணியத்திற்குரியவர்களே! எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் தொடர்பான அந்த மகத்தான முன்னறிவிப்புகளின் ஒரு சுருக்கமான கண்ணோட்டத்தை நான் உங்கள் முன் எடுத்து வைக்க விரும்புகின்றேன். அவைகள் உலகின் பௌதீக மற்றும் அரசியல் புரட்சியோடு தொடர்புடையதாகும். அதன் விளைவாக உலகத்தின் வரைபடமே மாறி விட்டது. இப்போது வரை உலகம் இரு உலகப் போர்களினால் பெரும் அவதிக்கும் உள்ளாகி விட்டது. இந்த இரண்டு போர்கள் தொடர்பாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் பல வருடங்களுக்கு முன்பாகவே முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்.

1904 ஆம் ஆண்டுகளில் மேற்கத்திய வல்லரசுகளுக்கு எதிரில் எந்தவொரு கிழக்கத்திய சக்திகளின் அறிகுறி கூட இருக்கவில்லை. அப்போது அல்லாஹ் வஹீயின் மூலமாக ஒரு கிழக்கத்திய சக்தி மற்றும் கொரியாவின் இக்கட்டான நிலைமை என்று அவர்களிடம் கூறினான்.

1914 ஆம் ஆண்டு முதல் உலகப் போர் நடைபெற்ற போது முன்னறிவிப்பிற்கேற்ப ஜப்பான் ஒரு கிழக்கத்திய சக்தியாக மேற்கத்திய சக்திகளுக்கு போட்டியாக உதயமானது. மேலும் கொரியா ஜப்பானின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததை உலகம் கண்டது. ஆனால் முதலில் அது ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்தது. இதே போல் அன்னாரின் முன்னறிவிப்புகளுக்கேற்ப உலகத்தின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த ரஷ்யாவின் ஸார் மன்னர் திடீரென தனது அரச குடும்பத்தோடு மிகவும் இழிவோடு ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். மேலும் அவரையும் அவருடைய அரச குடும்பத்தினரையும் பல்வேறு இடங்களில் கைதி செய்து எந்த அளவுக்கு வேதனைக்குரிய துன்பங்கள் வழங்கப்பட்டது என்றால் கேட்கும் போதே மனிதனின் உடல் நடுநடுங்கி விடுகின்றது. இறுதியில் ஸார் மன்னர் மற்றும் அவருடைய குடும்பத்திற்கு மிக மோசமான தண்டனை வழங்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டார். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம் ஸார் மன்னரின் அந்த பரிதாப நிலை எவ்வாறு இருக்கப் போகிறதோ என்பது அதே போல் நிறைவேறியது.

பிறகு இரண்டாம் உலகப் போர் 1939 லிருந்து 1945 வரை அன்னாரின் முன்னறிவிப்பிற்கேற்ப நடைபெற்ற போது எந்த அளவுக்கு அழிவு ஏற்பட்டது என்றால் முதல் உலகப் போரை விட மிகவும் அதிக அழிவை கொண்டதாகவும் அபாயகரமானதாகவும் அது இருந்தது. அந்த போரில் ஜப்பான் தோற்றுப் போனது. ஜப்பானின் நகரங்களான ஹிரோ ஷீமா மற்றும் நாகசாகிகளின் மீது அணு ஆயுத குண்டுகள் வீசப்பட்டு அந்த நகரங்களின் வரைபடம் ஏறக்குறைய உலகத்தை விட்டு மறையும் அளவிற்கு அழிக்கப்பட்டது. ஜப்பான் தோற்கடிக்கப்பட்ட அதே வேளையில் சீனா ஒரு கிழக்கத்திய சக்தியாக உலக வானில் உதயமானது. இந்த அனைத்து புரட்சிகளும் உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நிகழ்ந்தன. இன்று உலகம் இரு அணிகளாக பிரிந்து விட்டது. ஒரு பக்கம் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் உள்ளன. மறுபக்கம் ரஷ்யாவும் அதன் நேச நாடுகளும் உள்ளன. இந்த இரண்டு சண்டையிடும் அணிகளின் அழிவு பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவித்த முன்னறிவிப்பிற்கேற்ப அது மூன்றாம் உலகப் போரின் வடிவில் வந்து கொண்டிருக்கின்றது.

இது தொடர்பாக அன்னார் உலகை எச்சரித்தவாறு கூறினார்கள்:

உலகில் ஒரு கியாமத் வெளிப்படும். அது முதல் கியாமத் ஆகும். அனைத்து அரசர்களும் ஒருவர் மற்றவர் மீது போர் தொடுப்பார்கள். எந்த அளவுக்கு இரத்தம் சிந்தப்படும் என்றால் பூமி இரத்தத்தால் நிரம்பும். மேலும் ஒவ்வொரு அரசர்களின் பொது மக்களும் கூட தங்களுக்குள் கொடூரமாக சண்டையிட்டுக் கொள்வர். ஒரு உலகளாவிய அழிவு வரும். மேலும் இந்த அனைத்து சம்பவங்களின் தலைமையிடமாக சிரியா இருக்கும். (தஸ்கிரா பக்கம் 798)

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூன்றாம் உலகப் போரின் அபாயகரமான ஆபத்தின் செய்தியை வழங்கியவாறு கூறினார்கள்:

ஐரோப்பாவே நீயும் அமைதியில் இல்லை. மற்றும் ஆசியாவே நீயும் பாதுகாப்பில் இல்லை. தீப கற்பங்களில் இருப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கும் உதவ மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதை காண்கின்றேன். மேலும் மக்கள் காலியாவதை பார்க்கின்றேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை அமையாக இருந்தான். அவனுடைய கண்களின் முன் விரும்பத்தாக செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தும் வகையில் தனது முகத்தை காட்டுவான். காதுள்ளவர்கள் கேட்டுக் கொள்ளுங்கள். (ஹகீக்கத்துல் வஹீ பக்கம் 257– 1906 ஆம் ஆண்டு பதிப்பு, ரூஹானி கஸாயின் தொகுதி 22 லண்டன்).

கண்ணியத்திற்குரியவர்களே! இன்றைய உலகின் நிலைமை மற்றம் அரபு நாட்டில் நிலவுகின்ற குழப்பங்களின் விளைவாக ஒரு அரசியல் அரங்கேறி வருகின்றது. மேற்கத்திய சக்திகள் தனது சுய நலன்களுக்காக அந்த நாடுகளின் நிலைமைகளை மிக மோசமாக ஆக்கி இருக்கின்றனர். அதன் விளைவாக உலகம் மீண்டும் ஒரு போர் அதாவது மூன்றாம் உலகப் போரின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றது. இன்று மீண்டும் ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம் ஒரு கிழக்கத்திய ஆற்றல் மற்றும் கொரியாவின் இக்கட்டான நிலை இச்சூழ்நிலைகளை படம் பிடித்துக் காட்டுகின்றது. குறிப்பாக கொரியா மற்றும் அமெரிக்கா இடையேயுள்ள பிரச்சனை தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தெளிவாக கூறியுள்ளது என்னவென்றால்,

மத்திய கிழக்கு நாடுகள் அல்லது அரவு நாடுகளிலிருந்து மட்டும் போரின் நெருப்பு மூழாது. அமெரிக்கா மற்றும் கொரியா இடையே நிலவும் மோதல்கள் வரும் நாட்களில் அதிகமாகின்றன. மேலும் உலகத்தை ஆழ்ந்து கவனித்து வரக்கூடியவர்கள் மற்றும் கருத்து கூறுபவர்கள் வெளிப்படையாக கூறியிருப்பது என்னவென்றால் அமெரிக்கா சிறிதளவு ஆயுதங்களை பயன்படுத்தப்படும். அது இழப்பை ஏற்படுத்தாமல் அச்சமூட்டுவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டாலும் சரியே. அது அப்பகுதியில் மிக மோசமான போரை உருவாக்கம். (குத்பா ஜுமுஆ 30 ஜூன் 2017)

சுருக்கமாக, இன்று எவ்வித சந்தேகமுமின்றி உலகம் ஒரு மோசமான அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றது. எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் மூன்றாம் உலகப் போரின் அழிவின் முடிவு இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றியின் ஆரம்பமாக இருக்கும் என்பதும் அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் முன்னறிவிப்பாகும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தின் சூரியன் அதன் முழு பொழிவோடு உதயமாகும். மேலும் உலகை ஒளிமயமாக்கும். ஆனால் அதற்கு முன்பு உலகம் ஒரு உலகளாவிய அழிவை சந்திப்பதும் அவசியமாகும். மனித குலத்தை நிலை குலையச் செய்யும் அளவிற்கு இரத்தம் சிந்தும் அழிவுகள் நடைபெறும். ஆனால் இதுவொரு எச்சரிக்கை அடங்கிய முன்னறிவிப்பாகும் என்பதை மறந்து விடக்கூடாது. எச்சரிக்கை அடங்கிய முன்னறிவிப்புகள் பாவமன்னிப்பின் மூலமாக தாமதப்படுத்தப்படலாம். அல்லது அகலவும் முடியும். ஆனால் மனிதன் தனது இறைவன் பக்கம் குனிய வேண்டும். மேலும் பவமன்னிப்பு கோர வேண்டும். தனது நிலையை சரி செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு நடக்கும் என்றால் இப்பொழுதும் அவன் இறை தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

(குத்பாத்தே நாஸிர் பாகம் 1 பக்கம் 930–935)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 3 May 2018 Issue No. 18

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இறுதியாக நான் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஒரு மேற்கோளை எடுத்து வைத்து எனது சொற்பொழிவை நிறைவு செய்கிறேன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளைக்கிணங்க வந்த மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொண்டவர்களாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். இப்போது உலக அமைதியும் சமாதானமும் அன்னாரை சார்ந்தே உள்ளது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய வழிமுறைக்கேற்ப நடந்தே அமைதியை நிலைநாட்ட முடியும். உலகம் போரின் அழிவிலிருந்தும் நாசத்திலிருந்தும் தப்பிக்க முடியும் என்றால் இந்தவொரு வழியின் மூலமாக மட்டுமே தப்பிக்க முடியும்.

அது என்னவென்றால், ஒவ்வொரு அஹ்மதியும் ஒரு வேதனையோடு இந்த அழிவிலிருந்து மனித குலத்தை காப்பாற்றுவதற்காக துஆ செய்ய வேண்டும். இன்று ஒவ்வொரு அஹ்மதியின் கடமையும் என்னவென்றால் உலகில் வசிக்கும் மனிதர்களுக்காக வேதனையை உணர்ந்தவாறு வர இருக்கும் கஷ்டங்களினால் ஏற்பட இருக்கும் துயரங்களை உணர்ந்து துஆ செய்ய வேண்டும். இப்போது அவர்களுக்கு அந்த கஷ்டம் வரவில்லை. அதைப் பற்றிய உணர்வுகளும் அவர்களுக்கு இல்லை. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான அப்பாவிகளுடன் என்ன நடக்கப் போகிறது? மேலும் என்ன நடந்து கொண்டிருக்கிறத? என்றே தெரியவில்லை. அந்த அப்பாவிகளுக்காக துஆ செய்வது நமது கடமையாகும். ஒரு வேதனையோடு மனித குலம் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக துஆ செய்யுங்கள். போர்கள் நீங்குவதற்காகவும் துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆக்கள் மற்றும் சதகாக்கள் மூலம் கஷ்டங்கள் நீங்கி விடுகின்றன. உலகத்தின் ஒரு பகுதி அழிந்து பிறகு அவர்கள் அறிவை பயன்படுத்தி இறைவன் பக்கம் குனிந்து வரக் கூடியவரை ஏற்கட்டும் என்று நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. மாறாக, அல்லாஹ் எந்தவொரு நபருக்கும் அவரது தீய செயலின் காரணமாக அழிவில் இடக்கூடாது. என்பதில் தான் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதற்காக நாம் துஆ செய்கின்றோம். மேலும் உலகம் இதனை புரிந்து தீய முடிவிலிருந்து தப்ப வேண்டும் என்பதில் தான் நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு இணைவதில் தான் அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றது. அன்னார் தான் பாதுகாப்பு கோட்டை ஆவார்கள் என்கின்ற தூதுச் செய்தியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அடிமைகள் பொது மக்களிடம் பரப்ப வேண்டும். அத்தோடு அவர்களுக்காக துஆவும் செய்ய வேண்டும். எந்த அளவு உறுதியோடு துஆ செய்ய வேண்டும் என்றால் நம்முடைய துஆக்களின் மூலமாக அவர்களுக்கு அறிவு வரட்டுமாக. அல்லாஹ் அவர்களை அழிவின் குழியில் விழுவதிலிருந்து காப்பாற்றுவானாக. (குத்பா ஜுமுஆ 30 ஜூன் 2017).

*தூய்மையான உள்ளத்திற்கு*
*அதிகமான அடையாளங்களின் தேவையில்லை.*

*உள்ளத்தில் அச்சம் இருக்கும் என்றால் ஓர் அடையாளமே*
*போதுமானதாகும்.*

✪✪✪✪✪

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

ஆனால், மற்றவர்களை விட அதிகமாக இறைவனது உதவி இந்த கூட்டத்தினர் மீது இருப்பதையும் இதன் உதாரணம் எங்கும் காணப்படாத அளவுக்கு அவன் தனது சிறந்த கருணையால் இவர்களை காப்பாற்றி இருக்கின்றான் என்பதையும் மக்கள் இறுதியில் ஆச்சரியத்துடன் ஒப்புக் கொள்வார்கள். இதைக் கண்ட சில அறிவீனர்கள் பிரமித்துப் போவார்கள். சிலர் நகைப்பார்கள். சிலர் என்னை பைத்தியக்காரன் என்பார்கள். மேலும் சிலர் வழி முறைகளை பயன்படுத்தாமல் அருளை இறக்கக் கூடிய இறைவன் இருக்கின்றான் என்பதே இதன் விடையாகும். அவன் அவ்வாறு இல்லாதிருப்பின் அவனோடு தொடர்புள்ளவர்கள் உயிர் இருந்தும் இறந்து போயிருப்பார்கள். அவன் வியப்புமிக்க சக்தியுள்ளவனாயிருக்கிறான். அவனது தூய்மையான வல்லமைகள் வியப்பளிக்கக் கூடியவை. ஒரு பக்கம் அறிவீனர்களான பகைவர்களை தன் நண்பர்கள் மீது நாய்களைப் போல் ஆதிக்கம் செலுத்த வைக்கின்றான். மறுப்பக்கம் அவர்களுக்கு (நண்பர்களுக்கு) தொண்டு செய்யுமாறு மலக்குகளுக்கு கட்டளையிடுகிறான். அவ்வாறே உலகை அவனது கோபம் சூழ்ந்து கொள்ளும்போதும் அவனது தண்டனை கொடியோர்கள் மீது கொதித்து எழும்போதும் அவனது கண்கள் அவனது சிறப்பிற்குரிய மனிதர்களையே பாதுகாக்கின்றன. இவ்விதம் ஆகாமலிருந்தால் உண்மையாளர்களின் எல்லாப் பணிகளும் சிதறுண்டு போகும். மேலும் அவர்களுள் எவரையும் பிரித்தறிந்து கொள்ள முடியாமல் போகும். அவனது வல்லமைகள் முடிவற்றவையாகும். ஆனால், மக்களின் நம்பிக்கைக்கேற்பவே அவை வெளிப்படுகின்றன. எவர்களுக்கு திட நம்பிக்கையும் அன்பும் இறைவனைச் சார்ந்திருத்தலும் வழங்கப்பட்டுள்ளதோ மேலும் எவர்கள் மன இச்சையின் பழக்க வழக்கங்களை விட்டும் வெளியேற்றப்பட்டுள்ளார்களோ அவர்களுக்காகவே வழக்கத்திற்கு மாறான அற்புதங்கள் வெளிப்படுகின்றன. இறைவன் எதை நாடுகின்றானோ அதனை செய்கிறான். ஆனால், எவர்கள் இறைவனுக்காக தங்களது பழக்கவழக்கங்களை விட்டு விடுகின்றனரோ அவர்களுக்கு இறைவன் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட தனது வல்லமையை வெளிப்படுத்த விரும்புகின்றான். இக்காலத்தில் அவனை அறிந்தவர்களும் அவனது அற்புதமான வல்லமையின் மீது நம்பிக்கை கொள்பவர்களும் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். இதற்கு மாறாக இந்த மாபெரும் வல்லமையுள்ள இறைவன் மீது நம்பிக்கை இல்லாதவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

ஆனால், அவனது குரலை ஒவ்வொரு பொருளும் கேட்கிறது. அவனுக்கு முன் எந்த ஒரு விஷயமும் இயலாததாக இல்லை. இந்த இடத்தில் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், பிளேக் போன்ற வியாதிகளுக்கு மருத்துவம் செய்வது பாவம் இல்லைதான். மேலும், இறைவன் மருந்தை உருவாக்காத எந்த வியாதியும் இல்லை என்று ஒரு ஹதீதில் உள்ளது. ஆனால் எந்த அடையாளத்தை இறைவன் பூமியில் நமக்காக தெளிவுடன் வெளிப்படுத்த நாடுகிறானோ அவ்வடையாளத்தை தடுப்பூசியைக் கொண்டு சந்தேகத்திற்குரியதாக ஆக்குவதை நான் பாவமாகக் கருதுகிறேன். மேலும், அவனது உண்மையான அடையாளம், வாக்குறுதி ஆகியவற்றின் மகத்துவத்தை இழிவுபடுத்தி தடுப்பூசியின் பக்கம் நான் திரும்ப நாடவில்லை. நான் அவ்வாறு செய்வேனாயின் இறைவன் என்னோடு செய்த வாக்குறுதி மீது நான் நம்பிக்கை கொள்ளவில்லையென்ற பாவத்தின் காரணமாக நான் இறைவனின் பிடியில் வர நேரிடும். மேலும், நான் அவ்வாறு செய்வேனாயின் இந்த நான்கு சுவர்களுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் காப்பாற்றுவேன் என்று எனக்கு வாக்குறுதி அளித்த அவ்விறைவனுக்கு நன்றி செலுத்தாமல் தடுப்பூசி மருந்தை கண்டுபிடித்த அம்மருத்துவருக்கே நன்றி செலுத்த வேண்டியது வரும்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 1)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad